بسم الله الرحمن الرحيم     نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم     وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

23 முஹர்ரம் 1443 ஹிஜ்ரி கமரி 02 தபூக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 02 செப்டம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

مَا الۡمَسِيۡحُ ابۡنُ مَرۡيَمَ اِلَّا رَسُوۡلٌ‌ۚ قَدۡ خَلَتۡ مِنۡ قَبۡلِهِ الرُّسُلُ‌ؕ

மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவருக்கு முன்னுள்ள தூதர்கள் மரணமடைந்து விட்டனர். (5:76)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல்களிலிருந்து அவன் பயன்பெற்றால் நிச்சயம் அவனால் இறைநேசராக முடியும். எனவே தம்மைத்தாமே இழப்பிற்குரியவராக எவரும் கருத வேண்டாம். (அதில்) தமக்கு பங்கு கிடைக்காது என்று புரிந்து கொள்ளும்படி இறைவன் பட்டியல் எதனையும் வெளியிட்டுள்ளானா என்ன?**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் உங்களுக்கு உறுதியாக கூறுகின்றேன். இறைவன் நமது கஷ்டங்களை எளிமையாக்கி விட்டான். ஏனென்றால் இறைவனை அடைவதற்கான நமது வழிகள் வேறு வகையாகும். இடுப்பை முறித்தல் அல்லது நகங்களை அதிகரித்துக் கொள்ளுதல். அல்லது தண்ணீரில் நிற்றல் அல்லது வனவாசம் செல்லுதல் அல்லது உருவத்தையே சிதைத்துக் கொள்ளும் அளவிற்கு கைகளை செயலிழக்கச் செய்தல் போன்ற நிலைகளெல்லாம் நம்மிடம் இல்லை.

இந்த நிலைகளை மேற்கொள்வதால் இறை அடியார்களாக ஆகிவிடலாம் என அந்த மக்கள் மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் நான் பார்க்கின்றேன். இறைவன் கிடைப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அதுபோன்றவர்களிடத்தில் மனிதத்துவமே இல்லாமல் போய் விடுகின்றது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை இது போன்ற நடைமுறைகள் இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகள் அல்ல. இன்னும் கூறப்போனால் இஸ்லாம் ஏராளமான எளிய வழிகளை கொண்டுள்ளது. அவை மிகவும் பரந்துபட்ட வழிகளாகும். அது குறித்து இறைவன் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ (எங்களுக்கு நேரான வழியை காட்டுவாயாக) என்பதில் கூறியுள்ளான்.

தற்போது இறைவன் இதில் இந்த துஆவை கற்றுக் கொடுத்துள்ளான். துஆவை கற்றுக் கொடுத்து விட்டு அதற்குரிய எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்பதல்ல. மாறாக, எங்கு துஆவை கற்றுக் கொடுத்துள்ளானோ அங்கு அனைத்து ஏற்பாடுகளும் உள்ளன. எனவே அடுத்த அதிகாரத்தில் அதை ஒப்புக் கொள்வது பற்றி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّكۡرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوۡنَ

**அல்லாஹ்! அல்லாஹ்! எத்துனை அழுத்தம் தரப்பட்டுள்ளது. (இது) எந்த அளவிற்கு உறுதியான வாக்குறுதியாகும். இந்த வேதத்தின் மகத்துவம் என்னவென்றால், அதனை பாதுகாப்பதற்கு நாமே வருவோம். மேலும் எவர் இந்த வேதத்தின் மீது தவறான எண்ணத்துடன் கையை உயர்த்துகின்றார் என்பதை (நாம்) பார்ப்போம் (என்று அல்லாஹ் கூறுகின்றான்).**

**இது மிகவும் வலிமை வாய்ந்த வசனமாகும். இது ஒன்றே திருக்குர்ஆனின் உண்மைத்துவத்திற்கு தெளிவான சான்றாக அமைந்து விடுகிறது**

اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّكۡرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوۡنَ (15:10)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இது மிகவும் வலிமை வாய்ந்த வசனமாகும். இது எப்படிப்பட்ட ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்றால் திருக்குர்ஆனின் உண்மைத்துவத்திற்கு தெளிவான சான்றாக இந்த ஒரு வசனமே அமைந்து விடுகிறது. இதில் மிகவும் அழுத்தம் தரப்பட்டுள்ளது. முதலில் اِنَّ என்று கூறப்பட்டுள்ளது. பின்னர் نَا என்பது نَحۡنُ என்பதுடன் இணைக்கப்பட்டுள்ளது. பின்னர் அடுத்து முன்னேறிச் சென்று மற்றுமொரு اِنَّ மற்றும் لام கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரு வகையில் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டுள்ளது. اِنَّكَ لَمَجۡنُوۡنٌ என்பதில் இரண்டு வலியுறுத்தல்களை எடுத்து வைத்து நிராகரிப்பாளர்கள் ஏளனம் செய்திருந்தனர். அதற்கு பதிலாக இதில் அல்லாஹ் வலியுறுத்திக் கூறுவதற்கான நான்கு வழிமுறைகளை பயன்படுத்தியுள்ளான்.

اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّكۡرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوۡنَ என்று அவன் கூறுகின்றான். கேளுங்கள். நிச்சயமாக நாமே இந்த கண்ணியத்திற்குரிய வேதத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கினோம். நாம் எமது இருப்பின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். நாம் நிச்சயமாக இதனைப் பாதுகாப்போம். அல்லாஹ்! அல்லாஹ்! எந்த

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

## நபிமொழி

**அல்லாஹ் ஏழு நபர்களை தனது நிழலில் வைப்பான்**

**ஹதீஸ் எண்: 1423:–** ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தனது நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத (மறுமை) நாளன்று அல்லாஹ் எழு நபர்களை தனது நிழலில் வைப்பான். (அந்த நபர்கள் இவர்களாவர்): நீதிமிக்க அரசர். அல்லாஹ்வின் வணக்கத்தில் திளைத்திருக்கும் இளைஞர். ஸஜ்தாக்களுடன் பிணைக்கப்பட்ட இதயத்தை உடையவர். அல்லாஹ்வுக்காகவே அன்பு கொண்டு அவனுக்காகவே இணைந்திருந்து அவனுக்காகவே பிரிந்தவர். உயர் அந்தஸ்தும் அழகும் உள்ள ஒரு பெண் தன்னை (தவறுக்கு) அழைக்கும்போது 'நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்' என (அவளிடம்) கூறும் ஆண். மேலும் தன்னுடைய வலக்கரம் என்ன செலவு செய்தது என்பதை இடக்கரத்துக்கு தெரியாமல் இரகசியமாக வைத்து தருமம் செய்யும் நபர். தனிமையில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து (அவனுடைய அச்சத்தால்) கண்ணீர் வடிக்கும் நபர் (ஆகியோராவர்).

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஜுமுஆ பேருரை 30 ஜூலை 2021 (முழுவதுமாக)*

*ஹுஸூர் (அய்ய) அவர்களின் சுற்றுப்பயணம் (அறிக்கை)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**அன்னார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறியவாறு இரண்டாவது முறையாக அதன் மீது கோடாரியை அடித்தார்கள். மீண்டும் ஒரு தீப்பொறி வெளிப்பட்டது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், மீண்டும் அல்லாஹுஅக்பர் என்று கூறினார்கள். இந்த முறை பாரசீக அரசாங்கத்தின் திறவுகோல்கள் எனக்கு தரப்பட்டுள்ளன. மேலும் மதாயின் நகரத்து வெள்ளை நிற மாளிகைகள் எனக்கு தென்படுகின்றன என்று கூறினார்கள்**

**அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எந்த சமுதாயத்திற்கு இதனை வழங்குகின்றானோ அவர்களிடம் பரஸ்பரம், பொறாமையும், பகைமையும் அதிகரித்து விடும்**

**மதாயின், மாஸபஸான் மற்றும் கூரிஸ்தான் வெற்றிகள்**

**நான்கு மர்ஹூம்கள்: மதிப்பிற்குரிய பேராசிரியை செய்யது ஹன்லீன் சாஹிபா (லாஹூர்), மதிப்பிற்குரிய தாவூத் சுலைமான் பட் சாஹிப் (ஜெர்மனி), மதிப்பிற்குரிய ஸாஹிதா பர்வீன் சாஹிபா, மதிப்பிற்குரிய ரானா அப்துல் வஹீத் சாஹிப் (லண்டன்), மதிப்பிற்குரிய அல்ஹாஜ் மீர் முஹம்மது சாஹிப் (பங்களாதேஷ்) ஆகியோரின் நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30 ஜுலை 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **30 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. அன்னார் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற போர்களைக் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மதாயின் வெற்றியைக் குறித்து சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அல்லாஹ் வழங்கிய ஞானத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அது குறித்து முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்.

அதைக் குறிப்பிட்டவாறு அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அகழ் தோண்டிக் கொண்டிருந்தபோது ஓரிடத்திலிருந்து பாறை ஒன்று வெளிப்பட்டது. அது எந்த வகையிலும் உடையாமல் இருந்தது. சஹாபிகளின் நிலை எவ்வாறிருந்தது என்றால் தொடர்ந்து மூன்று நாட்கள் பட்டினியால் மிகவும் சோர்வாக இருந்தார்கள். இறுதியில் மிகக் கஷ்டத்திற்குள்ளாகி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும், ஒரு பாறை உள்ளது. அதை உடைக்க முடியவில்லை என்று முறையிட்டார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால் பசியின் காரணமாக அன்னார் (ஸல்) அவர்கள் தனது வயிற்றில் கல்லை கட்டியிருந்தார்கள். ஆயினும் அன்னார் (ஸல்) அவர்கள் உடனடியாக அங்கு புறப்பட்டுச் சென்றார்கள். ஒரு கோடாரியை எடுத்துக் கொண்டு அல்லாஹ்வின் பெயரை கூறியவாறு அந்த பாறையின் மீது அடித்தார்கள். கோடாரி பட்டவுடன் பாறையிலிருந்து ஒரு தீப்பொறி வெளிப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று சப்தமாக கூறினார்கள். மேலும் சிரியா அரசாங்கத்தின் சாவிகள் எனக்கு தரப்பட்டுள்ளன. இறைவன் மீது ஆணையாக! தற்போது சிரியாவின் சிவப்பு மாளிகைகள் என் கண்களுக்கு முன்னால் உள்ளன என்றும் கூறினார்கள்.

அந்த அடியின் மூலமாக அந்தப் பாறை ஓரளவிற்கு பிளந்து விட்டது. அன்னார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறியவாறு இரண்டாவது முறையாக அதன் மீது கோடாரியை அடித்தார்கள். மீண்டும் ஒரு தீப்பொறி வெளிப்பட்டது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், மீண்டும் அல்லாஹுஅக்பர் என்று கூறினார்கள். இந்த முறை பாரசீக அரசாங்கத்தின் திறவுகோல்கள் எனக்கு தரப்பட்டுள்ளன. மேலும் மதாயின் நகரத்து வெள்ளை நிற மாளிகைகள் எனக்கு தென்படுகின்றன என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த முறை பாறை ஓரளவிற்கு கூடுதலாக பிளவுபட்டிருந்தது. மூன்றாவது முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோடாரியைக் கொண்டு அடித்தார்கள். அதன் விளைவாக மீண்டும் ஒரு முறை நெருப்பின் பொறி ஒன்று வெளிப்பட்டது. அன்னார் (ஸல்) அவர்கள் மீண்டும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். இப்போது எனக்கு யமன் நாட்டு திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. இறைவன் மீது ஆணையாக! சின்ஆவின் வாசல்கள் தற்போது எனக்கு காட்டப்படுகின்றன என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த முறை அந்தப் பாறை முற்றிலும் உடைந்து தனது இடத்திலிருந்து விழுந்து விட்டது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரத்த குரலில் தக்பீர் கூறினார்கள். பின்னர் சஹாபிகள் அது குறித்து கேட்டபோது அன்னார் (ஸல்) அவர்கள் இந்த கஷ்ஃப் காட்சியை எடுத்துரைத்தார்கள். மேலும் முஸ்லிம்கள் அந்த தற்காலிக தடையை அகற்றி விட்டு பின்னர் தமது பணிகளில் மும்முரமாகி விட்டார்கள். அதாவது உடைப்பதற்கு இருந்த பணியை அவர்கள் செய்து முடித்து விட்டு தமது பணிகளில் மும்முரமாகி விட்டார்கள். பின்னர் அகழ் தோண்டுகின்ற பணி ஆரம்பமாகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த காட்சிகள் ஆன்மீக கஷ்ஃப் உலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

ஒரு வகையில் அந்த கடினமான நேரத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்களின் எதிர்கால வெற்றிகள் மற்றும் செழிப்பின் காட்சிகளை காட்டி சஹாபிகளிடத்தில் நம்பிக்கையின் ஆன்மாவை உருவாக்கி இருந்தான். ஆனால் வெளிப்படையில் அவர்களின் நிலை எப்படிப்பட்ட மோசமான துன்பமான நிலையாக இருந்ததென்றால் நயவஞ்சகர்கள் இந்த வாக்குறுதிகளை கேட்டு முஸ்லிம்களை எள்ளி நகையாடினார்கள். அதாவது வீட்டை விட்டு வெளியே கால் வைப்பதற்கு ஆற்றல் இல்லை. ஆனால் கைஸர் மற்றும் கிஸ்ராவின் அரசாங்கத்திற்கு இவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர் என்று அவர்கள் கூறினர். ஆனால் இறைவனிடத்தில் இந்த அனைத்து அருட்கொடைகளும் முஸ்லிம்களுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தன. எனவே இந்த வாக்குறுதி தத்தமது நேரத்தில் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி காலத்தில் சில விஷயங்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாக்களின் காலத்தில் பெரும்பாலான விஷயங்களும் முழுமையடைந்து முஸ்லிம்களின் ஈமானை அதிகரிப்பதற்கும் மன நிறைவிற்கும் காரணியாக அமைந்தன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 577–578)

மதாயின் வெற்றி குறித்து வழங்கப்பட்ட வாக்குறுதி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின்

கரங்களின் மூலமாக முழுமையடைந்தது. அதாவது மதாயின் வெற்றி கொள்ளப்படும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காட்டப்பட்டதுபோன்று அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் முழுமையடைந்தது. காதிஸிய்யாவை வெற்றி கொண்ட பிறகு இஸ்லாமிய படை பாபுலை வெற்றி கொண்டது. பாபுல் என்பது தற்போதைய ஈராக்கின் பழைய நகரமாக இருந்தது. பாபுலை வெற்றி கொண்ட பிறகு கூஸா என்ற பெயர் கொண்ட ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரத்தை அடைந்தார்கள். கூஸா என்பது பாபுலின் சுற்றுவட்டாரப் பகுதியாகும். அந்த இடத்தில் தான் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்ரூதை கைது செய்திருந்தார்கள். சிறைச்சாலைக்கான இடம் அப்போது வரை பாதுகாப்பாக இருந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்ததும் சிறைச்சாலையை பார்த்தபோது இந்த திருக்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

تِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ (3:141)

அதாவது நாம் இந்த நாட்களை மக்களிடையே மாற்றி மாற்றி வரச் செய்கின்றோம். அவர்கள் அறிவுரை பெற வேண்டும் என்பதற்காக (அவ்வாறு செய்கின்றோம்). கூஸா என்ற இடத்தை கடந்தபோது புஹுர்ஸீர் என்ற பெயர் கொண்ட ஓரிடத்தை அடைந்தார்கள். இது தஜல்லா நதியின் மேற்கு கரையோரத்தில் அமைந்துள்ள ஈராக் நகரத்தின் மதாயின் என்ற நகரத்தின் ஒரு பகுதியின் பெயராகும். இங்கு கிஸ்ராவினுடைய வேட்டையாடும் சிங்கம் இருந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் படை அருகே வந்தபோது அன்னார் அந்த விலங்கை படையிடம் விட்டு விட்டார்கள். சிங்கம் கர்ஜித்தவாறு படையை தாக்கியது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் சகோதரரான ஹாஷிம் பின் அபி வகாஸ் அவர்கள் படையின் முதல் பிரிவிற்கு அதிகாரியாக இருந்தார்கள். அன்னார் சிங்கத்தின் மீது வாளால் எந்த அளவிற்கு தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் சிங்கம் அங்கேயே சாய்ந்து விட்டது.

பின்னர், அதன் பிறகு மதாயின் போரும் நடைபெற்றது. மதாயின் நகரமும் ஈராக்கில் உள்ளது. அதன் Location என்னவென்றால் பாக்தாதிலிருந்து சிறிய தூரத்தில் தெற்கு புறத்தில் தஜல்லா நதிக்கரையோரத்தில் அது அமைந்துள்ளது. மதாயின் என்று அதற்கு பெயர் வைப்பதற்கு என்ன காரணமாக இருந்தது? ஏனென்றால் அங்கு ஒன்றன் பின் ஒன்றாக பல நகரங்கள் குடியேற்றம் அடைந்திருந்தன. எனவே அரேபியர்கள் அதனை மதாயின் அதாவது பல நகரங்களின் தொகுப்பு என கூறத்தொடங்கி விட்டனர். மதாயின் நகரம் கிஸ்ராவின் தலைநகரமாக இருந்தது. அங்கு அவர்களின் வெள்ளை மாளிகைகள் இருந்தன. முஸ்லிம்கள் மற்றும் மதாயினிற்கு இடையில் தஜல்லா நதி அமைந்திருந்தது. ஈரானியர்கள் நதியின் அனைத்து பாலங்களையும் உடைத்து விட்டார்கள். நதியை தாண்டுவதற்காக ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் படகுகளை தேடினார்கள். ஆனால் அவர்கள் (எதிரிகள்) படகுகளையும் கைப்பற்றி விட்டார்கள் என்பது பின்னர் தெரிய வந்தது.

முஸ்லிம்கள் நதியை தாண்டிச் செல்ல வேண்டுமென ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் விரும்பியிருந்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் மீது கொண்ட அனுதாபத்தால் அவ்வாறு செய்யவில்லை. சில கிராமப்புற மக்களும் நதியை தாண்டிச் செல்வதற்குரிய வழியை கூறினார்கள். இந்த வழியாக செல்லுங்கள். அவ்வாறு சென்றால் எளிமையாக கடக்க முடியும் என்று அவர்கள் கூறினர். ஆயினும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அதன்படி அமல் செய்யவில்லை. இதற்கிடையில் நதியில் வெள்ளமும் வந்து விட்டது. ஓர் இரவில் அன்னாருக்கு கனவில் காட்டப்பட்டது. அதாவது முஸ்லிம்களின் குதிரைகள் தண்ணீரில் இறங்கி விட்டன. மேலும் நதியை தாண்டிச் சென்று விட்டன இவ்வாறு அன்னார் கனவில் கண்டார்கள். ஆனால் அங்கு வெள்ளமும் இருந்தது. இந்த கனவை முழுமை செய்யும் விதமாக ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் நதியை தாண்டிச் செல்வதற்கு உறுதியான எண்ணம் பூண்டிருந்தார்கள்.

முஸ்லிம்களே! எதிரிகள் நதியில் அடைக்கலம் பெற்றுள்ளார்கள். வாருங்கள். இதில் நீந்தி கடந்து செல்வோம் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் படையினரிடம் கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு அன்னார் தனது குதிரையை நதியில் இறங்கச் செய்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் சிப்பாய்கள் தமது தலைவரை பின்பற்றியவாறு குதிரையை நதியில் இறக்கினார்கள். இஸ்லாமிய படைகள் நதியை கடந்து விட்டன. எதிர் தரப்பு படைகள் இந்த ஆச்சரியத்திற்குரிய காட்சியை கண்டபோது அச்சத்தால் உறைந்து விட்டனர். மேலும் தீவான் வந்து விட்டனர். அதாவது வானவர்கள் வந்து விட்டனர். வானவர்கள் வந்து விட்டனர் என்று கூறியவாறு ஓடத் தொடங்கினர். முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று நகரத்தையும், கிஸ்ராவின் மாளிகைகளையும் கைப்பற்றினார்கள். முஸ்லிம்கள் வருவதற்கு முன்பாகவே கிஸ்ரா தனது குடும்பத்துடன் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்று விட்டான். எனவே முஸ்லிம்கள் எளிதாக நகரத்தை கைப்பற்றி விட்டனர். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்பு நிறைவேறியது. அதாவது அஹ்ஸாப் போரின்போது அகழ் தோண்டிய நேரத்தில் பாறையின் மீது கோடாரியைக் கொண்டு அடித்தபோது எனக்கு மதாயின் நகரத்து வெள்ளை மாளிகைகள் வீழ்வது காட்டப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அந்த முன்னறிவிப்பு தற்போது நிறைவேறியது.

அந்த மாளிகைகளை காலியான நிலையில் இருந்ததைக்கண்டபோது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் சூரா துகானின் இந்த வசனங்களை ஓதினார்கள்:

كَمْ تَرَكُوْا مِنْ جَنّٰتٍ وَّعُيُوْنٍ وَّزُرُوْعٍ وَّمَقَامٍ

كَرِيْمٍ وَّنَعْمَةٍ كَانُوْا فِيْهَا فٰكِهِيْنَ

كَذٰلِكَ وَاَوْرَثْنٰهَا قَوْمًا اٰخَرِيْنَ (44:26–29)

அவர்கள் தங்களுக்குப் பின்னர் எத்தனையோ தோட்டங்களையும், நீரூற்றுகளையும் விட்டுச் சென்றனர். வயல்களும், மரியாதைக்கும், கண்ணியத்திற்குமுரிய இடங்களும் உள்ளன. நாம் மற்றொரு சமுதாயத்தை அந்த அருட்கொடைக்கு வாரிசாக்கி விட்டோம். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அரச கருவூலத்தையும் ஏனைய பொருட்களையும் ஓரிடத்தில் ஒன்றுகூட்டும்படி கட்டளையிட்டார்கள். அந்த கருவூலத்தில் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் இருந்த அரசர்களின் நினைவுப் பொருட்களும் அடங்கும். அதில் தங்கம், போர் கவசங்கள், வாள்கள், கத்திகள், மகுடம், அரச உடைகள் இருந்தன. தங்கத்தாலான ஒரு குதிரையும் இருந்தது. அது வெள்ளியால் பூசப்பட்டிருந்தது. மேலும் மார்பில் மாணிக்கங்களும், மரகதங்களும் இணைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று வெள்ளியால் ஆன ஓர் ஒட்டகமும் இருந்தது. அதன் சேணம் தங்கத்தால் அமைக்கப்பட்டிருந்தது. சாட்டையில் விலைமிகு மாணிக்கங்கள் கோர்க்கப்பட்டிருந்தன. போர் செல்வங்களில் ஒரு விரிப்பும் இருந்தது. அதனை ஈரானியர்கள் பஹார் என்று கூறி வந்தனர். அதன் நிலம் தங்கத்தாலும், மரம் வெள்ளியாலும், கனிகள் ஆபரணங்களாலும் அமைந்திருந்தன. இந்த அனைத்து பொருட்களையும் படை ஒன்றுகூட்டியது. ஆனால் முஸ்லிம் சிப்பாய்கள் எந்த அளவிற்கு நேர்மையானவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருந்தார்கள் என்றால் அங்கு முஸ்லிம் போர் வீரர்களின் நேர்மை நமக்கு தெரிய வருகின்றது.

யாருக்கு என்ன பொருள் கிடைத்ததோ அதனை அவர் அப்படியே கொண்டு வந்து அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டார். எனவே பொருட்கள் கொண்டு வந்து அலங்கரிக்கப்பட்டபோது தொலைதூரம் வரை மைதானம் மினுமினுத்தது. அப்போது அதைக்கண்டு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. மேலும் எந்த மக்கள் இந்த செல்வங்களிலிருந்து எதையும் எடுக்கவில்லையோ நிச்சயமாக அவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள். எனவே சட்டத்திற்கேற்ப போர் செல்வங்கள் பங்கிடப்பட்டு அதில் ஐந்தில் ஒரு பங்கு கிலாஃபத் அவைக்கு அனுப்பப்பட்டது. விரிப்புகளும், பழைய நினைவுச் சின்னங்களும் இந்த நிலையில் அனுப்பி வைக்கப்பட்டன. அதாவது ஈரானிய அரசர்களின் கம்பீரத்தையும், அதனை இஸ்லாம் வெற்றி கொண்டதையும் அரபுவாசிகள் கண்டு கொள்ளும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் இந்தப் பொருட்கள் அனைத்தும் வைக்கப்பட்டபோது அன்னாரும் படையின் நேர்மையைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். எவ்வளவு நம்பிக்கைக்குரிய சிப்பாய்களாக உள்ளனர் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் மிகவும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள்.

மஹ்லம் என்ற பெயர் கொண்ட ஒரு நபர் மதீனாவில் இருந்தார். அவர் உயரமானவராகவும், அழகானவராகவும் இருந்தார். நீண்ட நெடிய ஆடைகளை அவரை உடுத்தச் செய்யும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். அந்த ஆடைகள் பல்வேறு தரப்பட்ட நிலைகளில் இருந்தன. எனவே அனைத்து ஆடைகளையும் முறையாக உடுக்கச் செய்யப்பட்டன. இந்த ஆடைகளின் அழகைக்கண்டு மக்கள் மிகவும் ஆச்சரியத்தில் உறைந்து விட்டனர். அதேபோன்று

பஹார் என்ற பெயரைக் கொண்ட அந்த விரிப்பும் பங்கிடப்பட்டது.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 413–417 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 553 & தொகுதி 5 பக்கம் 88,89 & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 100–103 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பாகம் 2 பக்கம் 338 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஜலூலா என்ற போர் உள்ளது. அது ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு நடைபெற்றது. மதாயின் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு ஈரானியர்கள் ஜலூலா என்ற இடத்தில் ஒன்றுகூடி முஸ்லிம்களை எதிர்ப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹாஷிம் பின் உத்பா அவர்களை 12000 நபர்களைக் கொண்ட படையுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப ஈரானிய படையை எதிர்கொள்வதற்கு அனுப்பி வைத்தார்கள். ஜலூலா என்பது ஈராக்கிய நகரமாகும். அது பாக்தாதிலிருந்து கராஸான் என்ற இடத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது. அங்கு முஸ்லிம்கள் மற்றும் பாரசீகர்களுக்கு மத்தியில் போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் அந்த இடத்தை வந்தடைந்தபோது அவர்கள் நகரத்தை முற்றிகையிட்டு விட்டார்கள். மாதக்கணக்கில் முற்றுகையிட்டிருந்தார்கள். ஈரானியர்கள் அவ்வப்போது கோட்டையிலிருந்து வெளியேறி தாக்குதல் நடத்தி வந்தனர். இதுபோன்று 80 முறை போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் ஜலூலா நகரம் வெற்றி கொள்ளப்பட்ட நிலவரத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) அவர்கள் ஹல்வானில் முகாமிட்டுள்ளார்கள் என்றும் எழுதினார்கள்.

மேலும் அரபியல்லாதவர்களின் (அந்தப்) படையை பின்தொடர்ந்து செல்ல கடிதத்தில் அனுமதி வேண்டியிருந்தார்கள். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் பின் தொடர்ந்து செல்ல ஒப்புதல் வழங்கவில்லை. பின்வாங்க வேண்டாம். மாறாக, சவாதே ஈராக் மற்றும் ஈரானிய மலைக்கு மத்தியில் சுவரை எழுப்புங்கள். ஏனென்றால் அந்நிலையில் ஈரானியர்களால் நம் பக்கம் வரவும் முடியாது; நம்மால் அவர்களின் பகுதிக்கும் செல்ல முடியாது என்று அன்னார் கூறினார்கள்.

நமக்கு சவாதே ஈராக்கின் கிராமப்புற பகுதி போதுமானதாகும். நான் போர் செல்வங்களை பெறுவதை விட முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குகின்றேன். போர் செல்வங்களை ஒன்றுகூட்டுவதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. முஸ்லிம்களின் பாதுகாப்பும் அவர்களின் உயிர் பாதுகாப்பும் மிக அவசியமாகும்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் குலாபி பின் அம்ர் துவல்லி என்பவரின் கையில் தங்கம் மற்றும் வெள்ளியிலான பாத்திரங்கள், ஆடைகளையும் அபூ முஃபஸ்ஸர் அஸ்வர் என்பவரின் கைகளில் கைதிகளையும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு அறிவிப்பிற்கேற்ப கம்ஸே குலாமி மற்றும் அபூ முஃபஸ்ஸர் ஆகியோரின் கரங்களில் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். ஸியாத் பின் அபூசுஃப்யான் அவர்களின் மூலமாக இதற்கான கணக்கு அனுப்பப்பட்டது. ஏனென்றால் அவர் கணக்கு வழக்குகளின் அறிஞராக இருந்தார். மேலும் அதனை பதிவேடுகளில் பாதுகாத்து வந்தார். இவை அனைத்தும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அடைந்தபோது போர் செல்வங்களைக் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஸியாத் உரையாடினார். மேலும் அதன் முழு விவரங்களையும் எடுத்துரைத்தார். அப்போது முஸ்லிம்களுக்கு முன்னால் எழுந்து நின்று உங்களால் இதனை எடுத்துரைக்க முடியுமா? எனக்கு கூறும் இந்த விவரங்களை அவர்களுக்கும் கூற முடியுமா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

இறைவன் மீது ஆணையாக! உங்களை தவிர்த்து இந்த முழு உலகிலும் வேறு எவரைக் குறித்தும் எனக்கு அச்சமில்லை என்று அவர் பதிலளித்தார். நான் உங்களுக்கு முன்னால் எடுத்துரைத்துவிட்ட பிறகு மற்றவர்களுக்கு முன்னால் என்னால் ஏன் எடுத்துரைக்க முடியாது என்றும் கூறினார். எனவே ஸியாத் மக்களுக்கு முன்னால் எழுந்து நின்று அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்தார். முஸ்லிம்கள் செய்த சிறப்புகளை எடுத்துரைத்தார். போர் எவ்வாறு நடந்தது? எவ்வாறு போரில் செல்வங்கள் கைப்பற்றப்பட்டன? என்பதையும் எடுத்துக் கூறினார். மேலும் முஸ்லிம்கள் எதிரி நாட்டில் முன்னேறி எதிரிகளை பின்தொடர்வதற்கு அனுமதி விரும்புகின்றார்கள் என்றும் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரின் சொற்பொழிவை கேட்டுவிட்டு இவர் மிகச்சிறந்த சொற்பொழிவாளர் என்று கூறினார்கள். அப்போது நமது படை தனது செயல்பாடுகளின் மூலமாக எனது நாவை திறந்து விட்டது என்று ஸியாத் கூறினார்.

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கமஸ் அதாவது போர்ச் செல்வங்களிலல் ஐந்தில் ஒரு பங்கு முன் வைக்கப்பட்டது. அப்போது இது எந்த அளவிற்கு பெரும் போர் செல்வமாக இருக்கின்றதென்றால் இதனை ஒரு தளத்தின் கீழ் ஒன்றுகூட்ட முடியாது. எனவே நான் இதனை மிக விரைவாக பங்கிட்டு கொடுத்து விடுவேன் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) மற்றும் அப்துல்லாஹ் பின் அர்கம் ஆகியோர் பள்ளிவாசலின் வளாகத்தில் இரவு முழுவதும் அந்த செல்வத்தை பாதுகாத்து வந்தனர். செல்வம் வந்தது. பள்ளிவாசலின் வளாகத்தில் வைக்கப்பட்டபோது இந்த இரண்டு சஹாபிகள் அதற்கு பாதுகாப்பு அளித்து வந்தனர். காலை விடிந்ததும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுடன் பள்ளிவாசலுக்கு வந்தார்கள். போர் செல்வத்தின் மீது இருந்த துணியை எடுத்தார்கள். அப்போது பவள கற்களும், விலை மதிக்கத்தக்க ஆபரணங்களையும் கண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கினார்கள். அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்? இறைவன் மீது ஆணையாக! இது நன்றிக்கான தருணமாகும் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! இந்தப் பொருட்களைக் கண்டு நான் அழவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எந்த சமுதாயத்திற்கு இதனை வழங்குகின்றானோ அவர்களிடம் பரஸ்பரம், பொறாமையும், பகைமையும் அதிகரித்து விடும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

உங்களிடம் வந்துள்ள இந்த செல்வத்தால் நீங்கள் மக்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு பகரமாக பொறாமையிலும், பகைமையிலும் முன்னேறி விடக்கூடாது என்ற அச்சமே என்னை அழச் செய்தது. எந்த சமுதாயத்தில் பரஸ்பரம், பொறாமை அதிகரித்து விடுமோ அவர்களிடம் உள்நாட்டுப் போரும் துவங்கி விடும்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 468–471 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 420, 421 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 104 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

இது மிகவும் சிந்திக்க வேண்டிய, கவலை கொள்ள வேண்டிய விஷயமாகும். மேலும் இது மிகவும் பாவ மன்னிப்பு கோர வேண்டிய விஷயமாகும். அன்னார் எடுத்துரைத்த இந்த விஷயம் ஆகும். நாம் இன்று இதனையே பார்த்து வருகின்றோம். முஸ்லிம்களிடம் பொறாமையும், பகைமையும் செல்வம் வந்ததும் அதிகரித்துக் கொண்டே சென்று விட்டது. எவர்களிடம் எண்ணெய் வளம் உள்ளதோ அவர்களிடம் இது உள்ளது. அல்லது தனிப்பட்ட முறையில் பாருங்கள். எவரிடம் வேறொரு செல்வம் உள்ளதோ அந்நிலையிலும் இதே நிலைமையே உள்ளது. தக்வாவில் குறைபாடு உள்ளது.

மதாயின் போர் நடைபெற்றபோது ஈரானிய அரசன் யஸவ் ஜர்த் தமது அரியணையை விட்டு விட்டு தனது குடும்பம் மற்றும் ஊழியர்களுடன் ஹுல்வான் என்ற இடத்தை நோக்கி சென்று விட்டார். யஸவ் ஜர்திற்கு ஜலூலா போரில் தோல்வி குறித்த செய்தி கிடைத்தது. அப்போது அவர் ஹுல்வானை விட்டு புறப்பட்டு ரே என்று ஊருக்கு சென்று விட்டார். ஹுஸ்ர் வனூமிற்கு ஒரு கண்ணியத்திற்குரிய அதிகாரி இருந்தார். சில போர் படைகளை அங்கு விட்டு விட்டுச் சென்றார். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் சுயமே ஜலூலாவில் தங்கினார்கள். மற்றும் காகா என்பவரை ஹுல்வான் என்ற இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹுல்வானிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்திருந்த அக்ஸர் சீரீன் என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கு சென்று ஹுஸ்ர் வனூமை எதிர்கொண்டார்கள். ஆனால் அவன் தோற்று ஓடிவிட்டான். கஃகாஃ அவர்கள் ஹுல்வான் என்ற இடத்தை அடைந்து முகாமிட்டார்கள். எல்லாப் பக்கமும் அமைதிக்கான அறிவிப்பைச் செய்தார்கள். அக்கம் பக்கத்திலிருந்த தலைவர்கள் அனைவரும் வந்து ஜஸ்யா வரியை செலுத்தி சென்றார்கள். மேலும் இஸ்லாத்திற்கு ஆதரவு அளித்து வந்தார்கள்.

(அத்தவால் பத்திரிகை பக்கம் 183 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில்

இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 106 – 2001 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

மாசபாஸான் எப்படி வெற்றி கொள்ளப்பட்டது? இது குறித்து வருகின்றது. ஜலூலா போரில் படையின் அமீராக ஹஸ்ரத் ஹாஷிம் பின் உத்பா (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் மதாயினிற்கு திரும்பி இருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களும் அப்போது மதாயின் நகரத்தில் தங்கி இருந்தார்கள். ஆஸீன் பின் புர்முஸா என்பவரின் தலைமையில் ஓர் ஈரானிய படை முஸ்லிம்களுடன் மோதுவதற்காக திறந்த வெளி மைதானத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இது குறித்து அறிக்கை அனுப்பினார்கள். ஸிரார் பின் கத்தாப் அவர்களின் தலைமையில் அவர்களை எதிர்கொள்ள ஒரு படையை அனுப்பும்படியும், அந்த படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பு இப்னு ஹுதைல் அவர்களின் கரத்தில் ஒப்படைக்கும்படியும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழிகாட்டினார்கள். மேலும் அப்துல்லாஹ்பின் வஹப் ராஸ்பி மற்றும் மல்லாரிப் பின் ஃபுலான் ஆகியோர் துணை தளபதிகளாக இருக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். இஸ்லாமிய படை ஈரானிய படையை எதிர்கொள்வதற்கு புறப்பட்டது. மாஸப்ஸானின் திறந்தவெளி மைதானத்திற்கு அருகில் எதிரியை சந்தித்தது. ஹன்தஃப் என்ற இடத்தில் போர் நடைபெற்றது. அதில் ஈரானியர்கள் தோற்றனர். முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று மாஸப்பஸான் நகரத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். நகரவாசிகள் நகரத்தை விட்டு ஓடி விட்டனர். ஆனால் அமைதியுடன் உங்களது நகரத்தில் குடிபெயர்ந்து கொள்ளுங்கள் என்று ஸிரார் பின் கத்தாப் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அவர்கள் அழைப்பை ஒப்புக் கொண்டார்கள். மேலும் தமது வீடுகளில் குடியேறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 475 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மாஸப்பஸான் வெற்றிகளைக் குறித்து பலாஸரி பல்வேறு அறிவிப்புகளை தொகுத்துள்ளார்கள். ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது. அபூ மூஸா அஷ்அரி அவர்கள் நஹாவந்த் போரிலிருந்து திரும்பி வரும்போது எந்த சண்டையுமின்றி இந்த நகரத்தை வெற்றி கொண்டார்கள்.

(ஃபத்ஹுல் பல்தான் அல்லாமா பலாஸரி பக்கம் 185 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கூரிஸ்தான் வெற்றி கொள்ளப்பட்ட நிலவரங்கள் தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. கூரிஸ்தான் என்பது ஈரானுடைய ஒரு மாநிலமாகும். மேலும் புர்முஸான் என்பவர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்பு அதே மாநிலத்தின் முதல் கவர்னராக இருந்தார். அந்தப் பகுதியும், அந்தப் பகுதிவாசிகளும் ஹூஸ் என்று அழைக்கப்பட்டு வந்தனர். இதன் பொருள் என்னவென்றால், கூரிஸ்தான் பகுதியில் வசிக்கக்கூடியவர்கள் பாரசீகம் மற்றும் பஸ்ரா மற்றும் வாஸித், அஸ்ஃபஹான் மலைகளுக்கு மத்தியில் உள்ள இடம் என்பதாகும்.

ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இராணுவ நடவடிக்கையை கருத்தில் கொண்டும், சில நன்மைகளின் அடிப்படையிலும் ஈராக்கில் ஒரு சிறிய அளவிலான மற்றுமொரு அணியை அமைத்தார்கள். உத்பா பின் கஸ்வான் அவர்களின் தலைமையில் ஒரு சிறிய படையை அந்த இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இந்தப் படை அக்கம் பக்கத்திலுள்ள எதிரிகளின் பகுதியை மட்டும் வெற்றி கொள்ளவில்லை. மாறாக, அது ஈராக்கிய போர் திட்டங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. அதாவது நவாஹின் ஈரானிய படையின் உயர் தரமான மற்றும் பெரிய போரில் தனது தோழர்களின் தொடர் தோல்விகளை செவியுற்று அவர்களுக்கு உதவுவதற்கு செல்ல முடியாமல் இருந்தது. படையை அங்கு தங்கச் செய்வதற்கு இதுவே பெரிய நோக்கமாக தெரிய வருகின்றது. ஈரானிய படையின் உதவிகள் கிடைக்காததாலும் அவர்களால் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த முடியவில்லை. அந்தப் படையின் அமீர் ஹஜ் செய்வதற்கும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திப்பதற்கும் ஹிஜாஸிற்கு திரும்பிச் சென்று விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னார் இல்லாதபோது ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா (ரலி) அவர்களிடம் படையின் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள். ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா (ரலி) அவர்கள் மீது ஓர் ஒழுக்க ரீதியிலான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதனை விசாரிப்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை பதவி நீக்கம் செய்து விட்டு மதீனாவிற்கு அழைத்துக் கொண்டார்கள். அன்னாருடைய இடத்தில் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்களை தளபதியாக நியமித்தார்கள். எவ்வாறிருப்பினும் விசாரணையில் ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தவறானது என நிரூபணமானது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 438–442 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 259, 260)

அறிவிப்புகளில் முரண்பாடு உள்ளது. ஹிஜ்ரி 14 அல்லது 17 ஆம் ஆண்டில் இஸ்லாமிய படை மிகவும் மும்முரமாக இருந்தது. இந்தத் துறையில் போர் செயல்பாடுகள் மிகவும் விரிவடைந்திருந்தன. முஸ்லிம்கள் கூரிஸ்தானின் பிரபலமான நகரமாகிய அஹ்வாஸ் நகரத்தை கைப்பற்றி விட்டனர்.

தபரி வரலாற்று ஆசிரியர் இதனை ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் என குறிப்பிட்டுள்ளார். ஆனால் சில அறிவிப்புகளிலிருந்து இது வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டு ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு என்று தெரிய வருவதாகவும் அவர் எழுதியுள்ளார். இந்த வெற்றி குறித்து அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்: அப்போது உத்பா பின் கஸ்வான் அவர்களே படையின் தளபதியாக இருந்தார்கள். ஆனால் இதற்கு விரிவுரை எழுதியுள்ள பலாதரி என்பவர் இவ்வாறு எழுதியுள்ளார்:

அப்வாஸா மற்றும் அதன் பிறகு கிடைத்த வெற்றிகள் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் (ரலி) அவர்கள் திரும்பிச் சென்ற பிறகு ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா மற்றும் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) ஆகியோரின் தலைமையில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்கள் அப்வாஸ் நகரத்தை வெற்றி கொண்டார்கள். அப்வாஸின் தலைவர் பேரோஸ் என்பவருடன் முதலில் சண்டை நிகழ்ந்தது. எனினும் பின்னர் சமாதானம் ஏற்பட்டது. சிறிது காலம் கழித்து ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்களின் இடத்தில் அபூமூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் பஸ்ரா பகுதியின் இஸ்லாமிய படையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டார்கள். அப்போது பேரோஸ் என்ற தலைவர் உடன்படிக்கையை மீறி கிளர்ச்சி செய்தான். அவனை எதிர்கொள்வதற்கு ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். போருக்குப் பிறகு நகரத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் இந்த சம்பவம் நிகழ்ந்தது.

அப்வாஸ் போரில் இஸ்லாமிய படை ஏராளமான நபர்களை கைது செய்து அடிமையாக்கியது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். எந்த அடிமைத்தனமும் கிடையாது என்று அன்னார் கூறினார்கள். கைதிகளாக இருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டனர். விடுதலை வழங்கப்பட்டது.

தப்ரி அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: இந்தப் பகுதியில் ஈரானியர்கள் இரண்டு வழிகளில் முஸ்லிம் படையின் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் தொடுத்து வந்தனர். நெஹர்தைரா, யாவர்மனாஸிர் ஆகிய இந்த இரண்டு இடங்களும் ஈரானியர்களின் தலைமையகமாக இருந்தது. அந்த இடத்தில் சோதனை செய்து அந்த இரண்டு இடங்களையும் முஸ்லிம்கள் கைப்பற்றிக் கொண்டனர். எந்த இடங்களில் முஸ்லிம்களுக்கு தொல்லை தரப்பட்டதோ மேலும் எந்த இடங்களிலிருந்து மீண்டும் மீண்டும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதோ அந்த இடங்களில் முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தி அதனை முஸ்லிம்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்று பெரும்பாலான இடங்களில் தெரிய வருகின்றது.

எனவே பலாதரி எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் நெஹர்தைரா நகரத்தை வெற்றி கொண்டார்கள். மேலும் அப்வாஸ் நகரம் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு மனாஸிர் என்ற மற்றொரு நகரத்தை நோக்கி முன்னேறினார்கள். மேலும் நகரத்தை முற்றுகையிட்டுக் கொண்டார்கள். கடுமையான போர் மூண்டது. இந்த முற்றுகையின்போது ஒரு நாள் ஒரு முஸ்லிம் அவர் வீரமான முஹாஜிர் ஆவார். நோன்பு வைத்தவாறு தனது உயிரை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அர்ப்பணிக்கும் நோக்கத்துடன் எதிரிகளை எதிர்கொள்வதற்காக புறப்பட்டார். முஹாஜிர் சகோதரர் ரபீஹ் அவர்கள்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

படையின் அமீரான அபூ மூஸா அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். முஹாஜிர் நோன்பு இருப்பதைப் பார்த்துக் கொண்டு மைதானத்திற்கு செல்கின்றார்கள்.

அபூ மூஸா அவர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்: எவர் நோன்பு வைத்துள்ளாரோ ஒன்று அவர் நோன்பை திறந்து கொள்ளட்டும். அல்லது போர் மைதானத்திற்கு வரக்கூடாது என்று கூறினார்கள். முஹாஜிர் இந்த அறிவிப்பை கேட்டு விட்டு ஒரு குவளை தண்ணீரால் நோன்பை திறந்து விட்டார்கள். மேலும் அமீரின் கட்டளைக்காகவே நான் இவ்வாறு செய்கின்றேன். இல்லையென்றால் என்னை பொருத்தவரை தாகம் என்பது எனக்கு முற்றிலும் இல்லை. இவ்வாறு கூறியவாறு ஆயுதத்தை ஏந்தினார். பின்னர் போரிட்டவாறே ஷஹீதாகி விட்டார். நகரவாசிகள் அன்னாரது தலையை துண்டித்து மாளிகைக்கு வெளியில் உயரமான கற்களில் தொங்க விட்டு விட்டனர். முற்றுகை நீண்டு கொண்டே சென்றது. அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப படையின் ஒரு பகுதியை முஹாஜிர் சகோதரராகிய ரபீஹ் அவர்களின் தலைமையில் மன்னாஸிர் பகுதியை முற்றுகையிடுவதற்காக கூறியிருந்தார்கள். மேலும் சுயமே சூஸ்கி என்ற நகரத்தை நோக்கி முன்னேறினார்கள். அங்கு ரபீஹ் அவர்கள் சண்டையிட்டு நகரத்தை கைப்பற்றி விட்டார்கள். ஏராளமான மக்கள் கைதிகளாக பிடிக்கப்பட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளையின் விளைவால் இங்கேயும் அனைத்து கைதிகளும் விடுவிக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் சூஸ்கி நகரத்தை நோக்கி முன்னேறினார்கள். முதலில் நகரவாசிகள் சண்டையிட்டார்கள். போருக்குப் பிறகு நரகத்தை சுற்றி வளைத்து அமர்ந்து விட்டார்கள். இறுதியில் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டபோது ஆயுதங்களை அவர்கள் கீழே போட்டு விட்டார்கள்.

இந்த சம்பவங்களில் வெற்றிகளின் விளக்கம் குறித்து மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். மேலும் தனது கருத்தை குறிப்பிட்டுள்ளார்கள். எனவே அன்னார் கூறுகின்றார்கள்: தப்ரி மற்றும் பலாஸரி ஆகியோருக்கிடையில் ஏராளமான கருத்து வேறுபாடுகள் உள்ளன. அதற்குரிய ஒரு காரணம் இவ்வாறு தெரிய வருகின்றது. இந்தப் பகுதியில் ஈரானிய தலைவர்கள் உடன்படிக்கையை மீறி கிளர்ச்சி செய்ததன் விளைவாக இஸ்லாமிய படையின் இரண்டாவது போர் நடவடிக்கை தொடர்பான சம்பவங்களிலும் அறிவிப்புகளிலும் முதல் முறையாக வெற்றியுடனான சம்பவங்கள் சேர்க்கப்பட்டு கூறப்பட்டுள்ளன.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 494 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 124–127 & ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 225, 226)

அதாவது வெற்றிகள் கிடைத்த பின்னர் மீண்டும் அமைதி நிலைநாட்டப்பட்டது தொடர்பான விஷயங்கள் சந்தேகத்திற்குரியதாக ஆகிவிட்டது. ஆனால் எந்நிலையிலும் இது அவர்களின் கருத்தாகும்.

ராமெஹர்முஸா மற்றும் துஸ்துர் போர், யஸவ்ஜரத் என்ற ஈரானிய அரசன் ஜலூலா போருக்குப் பிறகு ரய் என்ற இடத்தைக் கடந்து இஸ்தகர் என்ற இடத்திற்கு சென்று விட்டார். இந்த இஸ்தகர் என்ற இடமும் ஓர் ஊரின் பெயராகும். தற்போது அவர்கள் தோல்வியை ஒப்புக் கௌ்ளவில்லை. மேலும் முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு மக்களுக்கு உணர்வூட்டிக் கொண்டிருந்தனர். மேலும் முழுமையாக முயற்சியும் செய்தனர். அதாவது கூரிஸ்தான் என்ற இந்த இடத்தில் முஸ்லிம்களுடன் போரிடுவதற்கு உதவுவதற்காக படை அனுப்பப்பட வேண்டும் என விரும்பினர். இந்தப் பகுதியில் போரின் நெருப்பை மூட்டுவதற்கும் உரிய காரணி புர்முஸான் என்ற தலைவரின் படை முஸ்லிம்களுக்கெதிராக இங்கு போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. அதுவும் ஒரு காரணமாக அமைந்தது. புர்முஸான் காதிஸிய்யா போரில் பங்கு பெற்றிருந்தான். அங்கு தோல்வியுற்று தனது நாட்டிற்கு திரும்பி இருந்தான். அங்கு முஸ்லிம்கள் மீது தொடர் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தான்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 471, 494 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 127, 128)

ஜலூலாவில் முஸ்லிம்களின் வெற்றிக்குப் பிறகு புர்முஸான் தலைமையில் ராமஹர்முஸ் எனும் இடத்தில் ஈரானியர்கள் ஒன்றுகூடினர். ராமஹர்முஸ் என்ற இடம் கூரிஸ்தானின் சுற்று வட்டாரத்திலுள்ள ஒரு பிரபல்யமான நகராகும். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைகிணங்க நுஃமான் பின் முகர்ரன் அவர்களை படைக்கு தலைவராக ஆக்கி கூஃபாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களை பஸராவிலிருந்து அனுப்பி வைத்தார்கள். இரண்டு படைகளும் ஒன்றுகூடும்போது அபூஸப்ஹரா பின்ருஹ்ம் அவர்கள் படைத்தளபதிகளாக இருப்பார்கள் என்று கூறியிருந்தார்கள். புர்முஸானிற்கு நுஃமான் பின் முகர்ரனின் படையின் தகவல் கிடைத்தபோது அவன் அன்னாருடன் போரிட்டான். கடுமையான போருக்குப் பிறகு புர்முஸான் தோல்வியுற்று துஸ்தர் என்ற இடத்தை நோக்கி ஓடிவிட்டான். துஸ்தர் என்ற இடம் கூரிஸ்தானிலிருந்து ஒரு நாள் பயண தொலைவில் அமைந்துள்ள ஒரு பெரும் நகரமாகும். அந்த நகரத்தில் அவன் முற்றுகையிடப்பட்டான். ஹஸ்ரத் அபூசுப்ஹரா அவர்களின் தலைமையில் இஸ்லாமிய படை அந்த நகரத்தை முற்றுகையிட்டது. பல மாதங்கள் வரை அந்த முற்றுகை தொடர்ந்தது. ஈரானிய படை மீண்டும் மீண்டும் வெளியேறி தாக்குதல் நடத்தி வந்தது. பின்னர் மீண்டும் திரும்பிச் சென்று கோட்டையின் வாசலை அடைத்துக் கொண்டது. இவ்வாறு இந்தப் போரில் 80 முறை சண்டை நடந்தது. கடைசி சண்டையில் முஸ்லிம்கள் முழு தாக்குதலுடன் கடுமையாக தாக்குதல் நடத்தினர். முஸ்லிம்கள் புறமிருந்து தாக்குதல் கடுமையான உடன், நகரத்தில் தண்ணீர் எடுக்கக்கூடிய வழிப்பாதையில் சென்று உள்ளே நுழைந்து நகரத்தை வெற்றி கொண்டு விட முடியும் என்று இரண்டு பாரசீகர்கள் முஸ்லிம்களிடம் கூறினர். எனவே முஸ்லிம்கள் நகரத்தில் நுழைந்து விட்டார்கள்.

இது குறித்து அத்திவால் எனும் பத்திரிகையின் ஆசிரியர் அபூ ஹனீஃபா தீன்வரி அவர்கள் எழுதியுள்ளார்கள்: முஸ்லிம்களின் முற்றுகையிடுதல் மிகவும் நீண்டு விட்டது. ஓர் இரவு நகரத்தின் ஒரு கண்ணியமிக்க நபர் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களிடம் வந்தார். தனக்கும் தனது குடும்பத்திற்கும், தனது செல்வத்திற்கும் பாதுகாப்பை பெற்றுக் கொண்டு நகரத்தை கைப்பற்றுவதில் உதவி செய்வதாக கோரிக்கையை முன் வைத்தார். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள்.

ஃபத்ஹுல் பல்தான் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது அந்த நபர் முஸ்லிமாகி விட்டார். என்னுடன் ஒரு நபரை அனுப்புங்கள். நான் அவருக்கு அதனை காட்டிக் கொடுக்கின்றேன் என்று அந்த நபர் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களிடம் கூறினார். அதாவது முஸ்லிம்கள் எவ்வாறு கோட்டையில் நுழைய முடியும் என்பதற்கான வழியை நான் காட்டித் தருகின்றேன் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் பனூ ஷைபான் கோத்திரத்திலிருந்து அஷ்ரஸ் பின் அவ்ஃப் என்ற ஒரு நபரை அவருடன் அனுப்பினார்கள். அவர்கள் இருவரும் ஒரு சிறிய நதியை கடந்தவாறு ஒரு சுரங்கப் பாதையின் வழியாக நகரத்தினுள் நுழைந்து விட்டார்கள். அந்த நபர் அஷ்ரஸ் பின் அவ்ஃப் அவர்கள் மீது ஒரு போர்வையை போர்த்தி விட்டார். மேலும் நீங்கள் எனக்குப் பின்னால் எனது பணியாளரைப் போன்று வர வேண்டும் என்றும் அவர் கூறினார். அவர் அவரை அழைத்துக் கொண்டு நகரம் முழுவதையும் சுற்றி வந்தார். பின்னர் அவர் நகரத்தின் வாசலுக்கு சென்றார். அங்கு காவலாளிகள் இருந்தனர். பின்னர் அவர் புர்முஸானிடம் சென்றார். அவர் தமது மாளிகையின் வாசலில் கூடியிருந்த சபையில் அமர்ந்திருந்தார். இந்த அனைத்தையும் அவருக்கு காண்பித்த பிறகு அதே வழியாக அவர் திரும்பி வந்தார். அஷ்ரஸ் பின் அவ்ஃப் அவர்கள் திரும்பி வந்து ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களிடம் அனைத்தையும் கூறினார்கள். நீங்கள் என்னுடன் 200 வீரர்களை அனுப்பி விடுங்கள். நான் காவலாளிகளை கொன்று விட்டு கதவுகளை திறந்து விடுவேன். நீங்கள் வெளியிலிருந்து வாசல் வழியாக நுழைந்து எங்களுடன் இணைந்து விடுங்கள் என்று அஷ்ரஸ் பின் அவ்ஃப் கூறினார்.

இவ்வாறு அஷ்ரஸ் பின் அவ்ஃப் அவர்கள் தமது தோழர்களுடன் அந்த இரகசிய பாதையின் வழியாக நகரத்தினுள் நுழைந்தார்கள். மேலும் காவலாளிகளை கொலை செய்து விட்டு நகரத்தின் வாசலை திறந்து விட்டார்கள். இஸ்லாமிய படை அல்லாஹு அக்பர் என்று உரத்த குரலில் முழக்கமிட்டவாறு நகரத்திற்கு உள்ளே

நுழைந்தது. பு்ர்முஸான் முழக்கங்களின் சப்தங்களைக் கேட்டு நகரத்திற்குள்ளே அமைந்திருந்த தனது கோட்டையை நோக்கி ஓடினார். மேலும் நகரத்தினுள் நுழைந்தார். முஸ்லிம்கள் அந்த கோட்டையை சுற்றி வளைத்தனர். என்னிடம் 100 அம்புகள் உள்ளன. அதில் ஒன்று எஞ்சியிருக்கும் வரை என்னை எவரும் நெருங்க முடியாது. அதன் பிறகு நான் கைது செய்யப்பட்டு விட்டால் எனது கைதைப் பற்றி நான் என்ன கூறுவது? என்று மேலே இருந்து கொண்டு முஸ்லிம்களை பார்த்து பு்ர்முஸான் கூறினார். பின்னர் நீர் என்ன விரும்புகின்றீர்? என்று முஸ்லிம்கள் கேட்டனர். என்னைப் பற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முடிவெடுத்துக் கொள்ளட்டும் என்ற நிபந்தனையின் கீழ் நான் ஆயுதங்களை வீசி விடுகின்றேன் என்று அவர் கூறினார். இவ்வாறு பு்ர்முஸான் ஆயுதங்களை வீசிவிட்டு முஸ்லிம்களிடம் சரணடைந்து விட்டார்.

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) மற்றும் அஹ்னஃப் பின் கைஸ் ஆகியோரின் மேற்பார்வையில் பு்ர்முஸானை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தக் குழு மதீனாவிற்குள் நுழைந்தபோது அவர்கள் பு்ர்முஸானிற்கு தங்க வேலைப்பாடுகளால் ஆன அவரது பட்டாடையை அவருக்கு உடுக்கச் செய்தனர். அவர் கைதியாக இருந்தார். ஆயினும் மிகவும் கண்ணியத்திற்குரிய ஆடை அவருக்கு அணிவிக்கப்பட்டது. அவரது தலையில் வைரங்களால் ஆன மகுடம் அணிவிக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், முஸ்லிம்களும் அவருடைய அசல் நிலையை பார்க்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. இவ்வளவு பெரிய தலைவரை நாம் கைது செய்திருக்கின்றோம் என்பதை கூறுவதற்காகவும் அவ்வாறு செய்யப்பட்டது. பின்னர் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி விசாரித்தபோது அன்னார் பள்ளிவாசலில் இருப்பதாக மக்கள் கூறினர். அவர்கள் பள்ளிவாசலை அடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது தலைப்பாகையின் மீது தலையை வைத்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

உமர் எங்கே? என்று பு்ர்முஸான் கேட்டார். அன்னார் தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று மக்கள் கூறினர். அப்போது பள்ளிவாசலில் அன்னாரைத் தவிர்த்து வேறு எவரும் இருந்திருக்கவில்லை. அன்னாருடைய காவலாளிகள் மற்றும் அரசவை ஊழியர்கள் எங்கே என்று பு்ர்முஸான் கேட்டார். அதற்கு அன்னாருக்கு எந்த காவலாளிக்கும், அரசவை ஊழியருக்கும், எழுத்தாளருக்கும் அவசியம் இல்லை என்று கூறினர். இந்த நபர் நிச்சயம் ஒரு நபியாக இருப்பதை போன்று தோன்றுவதாக தன்னையும் அறியாமல் பு்ர்முஸான் கூறினார். இவர் நபி இல்லை. எனினும் நபிமார்களின் வழியில் நிச்சயம் இருக்கின்றார் என்று மக்கள் கூறினர். மக்களின் பேச்சுக்களால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கண்விழித்து விட்டார்கள். இவர் பு்ர்முஸானா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆம் என்று மக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரையும், அவரது ஆடையையும் உற்றுநோக்கி பார்த்தார்கள். மேலும் நான் நெருப்பிலிருந்து அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகின்றேன். அல்லாஹ்வின் உதவியை வேண்டுகின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இவர் பு்ர்முஸான் ஆவார். இவருடன் பேசுங்கள் என்று குழுவிலிருந்த மக்கள் கூறினர். இவர் தனது அலங்காரமான ஆடைகளையும், நகைகளையும் கழற்றி விடாதவரை இவருடன் நான் ஒருபோதும் பேச மாட்டேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அவரது அனைத்து நகைகளும், அரசவை ஆடைகளும் அகற்றப்பட்டன. பு்ர்முஸானிடம் பேச்சு வார்த்தை தொடங்கியது. உடன்படிக்கை மீறுதல் மற்றும் ஏமாற்றுவதன் விளைவை கண்டு கொண்டீரா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவருடன் நடந்த சண்டை என்பது உடன்படிக்கையை மீறியதன் விளைவாகவே நடந்தது. அவர் ஏமாற்றியதன் காரணமாகவே போர் நடந்திருந்தது. அறிவீனமான காலத்தில் இறைவன் நம் இருவரில் எவருடனும் இருக்கவில்லை. அப்போது நாங்கள் உங்கள் மீது மேலோங்கி இருந்தோம். ஆனால் தற்போது இறைவனின் உதவி உங்களுடன் உள்ளது. எனவே தற்போது நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்று பு்ர்முஸான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பதிலளித்தார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அறிவீனமான காலத்தில் உங்களிடத்தில் ஒற்றுமை இருந்தது. எங்களிடத்தில் பிரிவினை இருந்தது. இதன் காரணமாகவே நீங்கள் அறிவீனமான காலத்தில் வெற்றி பெற்றிருந்தீர்கள். நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருந்தீர்கள். நாங்கள் பிளவுபட்டிருந்தோம். இதுவே மிகப்பெரிய காரணமாக இருந்தது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீர் மீண்டும் மீண்டும் உடன்படிக்கையை மீறியுள்ளீர். தற்போது நீர் என்ன சாக்குபோக்கை கூறுகின்றீர்? என்று பு்ர்முஸானிடம் கேட்டார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோன்று உடன்படிக்கையை மீறியதன் காரணமாகவும் அவருடன் இந்தப் போர் நடைபெற்றிருந்தது. ஏனென்றால் அவர்கள் அமைதி நிறைந்த அண்டை அயலாராக வசிக்க விரும்பியிருக்கவில்லை.

நான் ஒன்றைக் கூறுவதற்கு முன்பாகவே நீங்கள் என்னை கொலை செய்து விடுவீர்களோ என்று நான் அஞ்சுகின்றேன் என்று பு்ர்முஸான் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பயப்பட வேண்டாம் என்று கூறினார்கள். அப்போது பு்ர்முஸான் தண்ணீர் வேண்டும் என்றார். எனவே அவருக்கு ஒரு பழைய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. நான் இதுபோன்ற பாத்திரத்தில் தண்ணீர் குடிக்க மாட்டேன். நான் தாகத்தால் மரணித்தாலும் சரியே என்று பு்ர்முஸான் கூறினார். எனவே அவருடைய கண்ணியத்திற்குரிய பாத்திரத்தில் அவருக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அப்போது அவருடைய கரம் நடுங்கியது. நான் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும்போது நான் கொல்லப்பட்டு விடுவேனோ என்று தனக்கு அச்சமாக இருப்பதாக பு்ர்முஸான் கூறினார். அப்போது நீர் தண்ணீர் குடித்து விடாத வரை உமக்கு எந்த துன்பமும் ஏற்படாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதைக்கேட்டு விட்டு அவர் தண்ணீரை நிலத்தில் வீசி விட்டார். புத்திசாலியாக இருந்தார். தண்ணீர் குடிப்பது நிபந்தனை என்றால் பின்னர் முஸ்லிம்கள் வாக்குறுதியில் உறுதியானவர்கள் ஆவர் என்று கூறினார். நான் தண்ணீர் குடிக்கவே மாட்டேன் என்று கூறி தண்ணீரை நிலத்தில் வீசி விட்டார். அவருக்கு மீண்டும் தண்ணீர் கொடுங்கள். இவர் தாகத்துடன் கொலை செய்யப்படக்கூடாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதுவே தண்டனைக்கு காரணமாக இருந்தது. அதாவது உடன்படிக்கையை மீறுதல் மற்றும் குழப்பம் செய்து முஸ்லிம்களுடன் போர் புரிதல். இவையே அவரது தண்டனைக்கு காரணமாக இருந்தது. எனக்கு தண்ணீர் குடிப்பதற்கு தாகம் இல்லை. நான் இவ்வாறு அடைக்கலம் பெற்றுக் கொள்ள விரும்பினேன் என்று பு்ர்முஸான் கூறினார். கடைசியில் அவர் உண்மையை கூறி விட்டார். அதன் பிறகு பு்ர்முஸான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். மதீனாவிலேயே தங்கத் தொடங்கி விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு 2000 உதவித் தொகையை நிர்ணயித்தார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 422–425 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & அத்வால் பத்திரிகை அல்லாமா அபூஹனீஃபா தீன்தரி அவர்கள் பக்கம் 188–190 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 536 – 1987 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 19, தொகுதி 2 பக்கம் 34 – 1997 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இக்துல் ஃபரீதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பு்ர்முஸானை கைது செய்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு கொடுத்தார்கள். ஆனால் பு்ர்முஸான் அதனை நிராகரித்து விட்டார். இவரை கொன்று விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவர் கொலை செய்யப்பட இருந்தபோது, அமீருல் மூமினீன் அவர்களே! எனக்கு தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தண்ணீர் கொடுக்க கட்டளையிட்டார்கள். தண்ணீர் பாத்திரம் அவரது கையில் வைக்கப்பட்டபோது நான் தண்ணீர் குடிக்கும் வரை எனக்கு பாதுகாப்பு வழங்கப்படுமா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் பு்ர்முஸான் கோட்டார். ஆம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது பு்ர்முஸான் தண்ணீர் பாத்திரத்தை தனது கைகளால் வீசி விட்டார். மேலும் நீங்கள் உங்களது வாக்குறுதியை முழுமை செய்யுங்கள் என்று கூறினார். நான் உமக்கு சிறிது காலக்கெடு வழங்குகின்றேன். நீர் எவ்வாறு அமல் செய்கின்றீர்? என்று நான் பார்க்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவரிடமிருந்து வாள் அகற்றப்பட்டபோது,

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

என்று புர்முஸார் கூறினார். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. அவனுக்கு எந்த இணையும் இல்லை. மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனுடைய அடியாரும், தூதரும் ஆவார்கள் என்று நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்று புர்முஸான் கூறினார். நீர் முன்னரே ஈமான் ஏன் கொள்ளவில்லை? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புர்முஸானிடம் கேட்டார்கள். அதற்கு அமீருல் மூமினீன் அவர்களே! நான் வாளின் அச்சத்தால் நம்பிக்கை கொண்டதாக மக்கள் கூறுவார்கள் என்று நான் அஞ்சினேன். ஏனென்றால் எனது தலைக்கு மேல் வாள் தொங்கிக் கொண்டிருந்தது. நான் அதன் அச்சத்தால் முஸ்லிமாகி விட்டேன் என்று மக்கள் கூறிவிடக்கூடாது என்று நான் அஞ்சினேன். இதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புர்முஸானிடம் ஈரான் மீது படையெடுப்பது தொடர்பாக ஆலோசனை செய்து வந்தார்கள். மேலும் அவரது ஆலோசனைக்கேற்ப அமல் செய்து வந்தார்கள். பின்னர் அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆலோசகராக ஆகி விட்டார்.

(அக்தல் ஃபரீத் தொகுதி 2 பக்கம் 144 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது அதில் புர்முஸானின் கரம் இருந்தது என்றும் சந்தேகம் கொள்ளப்படுகிறது.

(மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 135)

ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சந்தேகத்தை சரியானதாக கருதவில்லை. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா கஸாஸின் வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஓர் உடன்படிக்கையின் கீழ் இஸ்லாமிய அரசாங்கத்தின் குடிமகனாக இருந்த ஒரு காஃபிரை கொலை செய்த முஸ்லிம் ஒருவர் கொண்டு வரப்பட்டார். யாரிடம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததோ அவர் கொலை செய்யப்பட்டிருந்தார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை கொலை செய்யும்படி கட்டளையிட்டிருந்தார்கள். மேலும் நான் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களில் மிக அதிகமாக உடன்படிக்கையை கண்காணிப்பாளனாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். யாரிடம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததோ அவரை ஏன் கொலை செய்தீர்கள்? எனவே தண்டனை வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். அந்த முஸ்லிமும் கொலை செய்யப்பட்டு விட்டார்.

இதேபோன்று தப்ரானி அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைக் குறித்து இவ்வாறு அறிவிப்பு செய்கின்றார்கள்: ஒரு முஸ்லிம் ஒரு ஸிம்மியை கொலை செய்தபோது அன்னார் அந்த முஸ்லிமையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டார்கள். சில மக்கள் لَا يُقْتَلُ مُؤْمِنٌ بِكَافِرٍ என்று ஹதீஸில் வருகிறது என்று கூறுகின்றனர். அதாவது எந்தவொரு நம்பிக்கையாளரும் ஒரு நிராகரிப்பாளருக்கு பகரமாக கொலை செய்ய மாட்டார் என்று நபிமொழியில் வருகின்றது. ஆயினும் முழு ஹதீஸையும் பார்ப்பதால் விஷயம் தீர்ந்து விடுகின்றது.

لَا يُقْتَلُ مُؤْمِنٌ بِكَافِرٍ وَلَا ذُوْ عَهْدٍ فِيْ عَهْدِهِ இதுவே ஹதீஸின் அசல் சொற்களாகும். وَلَا ذُوْ عَهْدٍ فِيْ عَهْدِهِ இது இந்த ஹதீஸின் இரண்டாவது வாக்கியமாகும். இது அதன் பொருளை நமக்கு விளக்கி விடுகின்றது. நிராகரிப்பாளருக்கு பதிலாக முஸ்லிம் கொலை செய்யப்படக்கூடாது என்று பொருள் கொள்ளப்பட்டால் பின்னர் وَلَا ذُوْ عَهْدٍ فِيْ عَهْدِهِ என்பதற்கு ذُوْ عَهْدٍ என்று பொருள்படும். அதாவது எந்த உடன்படிக்கையின் கீழ் இருப்பவரையும் நிராகரிப்பாளருக்கு பதிலாக கொலை செய்யக்கூடாது என்று பொருள் கொள்ள நேரிடும். ஆனால் இதனை எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார். எனவே இங்கு காஃபிர் என்பதன் பொருள் பொதுவான காஃபிர் அல்ல. குறிப்பிட்ட காஃபிர் ஆவார். அதாவது போர் செய்யக்கூடிய காஃபிர் என்று பொருள்படுமேயொழிய பொதுவான காஃபிர் என்பது பொருளல்ல. ஸிமி காஃபிரும் கூட சண்டையிடும் காஃபிருக்கு பகரமாக கொலை செய்யப்பட மாட்டார்.

தற்போது நாம் சஹாபிகளின் செயல் வழிமுறைகளைப் பார்த்தோம் என்றால் சஹாபிகளும் முஸ்லிம் அல்லாதவர்களின் கொலையாளிக்கும் கூட மரண தண்டனையே வழங்கி வந்தார்கள் என்பது நமக்கு தெரிய வருகின்றது. எனவே தப்ரியில் குமாஸுபான் பின் புர்மஸான் தனது தந்தை கொலை செய்யப்பட்ட சம்பவத்தை எடுத்துரைக்கின்றார். புர்முஸான் ஓர் ஈரானிய தலைவரும், மஜூஸி மார்க்கத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தார். இரண்டாவது கலீபா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கொலை செய்யும் சதித்திட்டத்தில் பங்கு பெற்றதாக அவர் மீது சந்தேகம் கொள்ளப்படுகிறது. அப்போது விசாரிக்காமல் ஆவேசப்பட்டு உபைதுல்லாஹ் பின் உமர் அவரைக் கொன்று விட்டார். ஈரானிய மக்கள் மதீனாவில் ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்ந்து வந்தார்கள் என்று அவர் கூறினார். பொதுவான சட்டத்திற்கேற்ப மற்ற நாடுகளுக்கு சென்று குடியேறும்போது அவர் தனித்து தெரிகின்றார். எனவே ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியாக இருந்த ஃபிரோஸ் என்ற நபர் எனது தந்தையை சந்தித்தார். அவனிடம் ஒரு கத்தி இருந்தது. அது இரண்டு புறமும் கூர்மையாக்கப்பட்டிருந்தது. எனது தந்தை அவனிடமிருந்த கத்தியை பறித்துக் கொண்டார். இந்த நாட்டில் நீ இந்த கத்தியைக் கொண்டு என்ன பணி செய்யப் போகின்றாய்? என்று அவனிடம் கேட்டார்.

அதாவது இந்த நாடு அமைதி நிறைந்த நாடாகும். இது போன்ற ஆயுதங்களுக்கு என்ன அவசியம் வந்து விட்டது? என்று கேட்டார். அதற்கு நான் இதன் மூலம் ஒட்டகங்களை மேய்க்கின்ற பணியை செய்கின்றேன் என்று அவன் கூறினான். அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தபோது யாரோ ஒருவர் அவர்களை பார்த்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டபோது அதாவது ஷஹீதாக்கப்பட்டபோது நான் சுயமே இந்த கத்தியை புர்முஸானிடம் ஃபிரோஸ் கொடுப்பதை நான் கண்டேன் என்று அந்த நபர் கூறினார்.

அப்போது புர்மஸானின் மகன் இவ்வாறு கூறினார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறிய மகனாக இருந்த உபைதுல்லாஹ் சென்று எனது தந்தையை கொன்று விட்டார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவானபோது அன்னார் என்னை அழைத்தார்கள். மேலும் உபைதுல்லாஹ்வைப் பிடித்து என்னை ஒப்படைத்து விட்டார்கள். எனது மகனே! இவர் உமது தந்தையின் கொலையாளி ஆவார். எம்மை விட இவர் மீது நீ அதிக உரிமை படைத்துள்ளாய். எனவே நீ சென்று அவரை கொன்று விடு என்று என்னிடம் கூறினார்கள்.

நான் அவரை பிடித்துக் கொண்டேன். மேலும் நகரத்தை விட்டு வெளியேற்றினேன். வழிப்பாதையில் என்னை சந்திக்கும் நபர் என்னுடன் இணைந்து கொண்டார். ஆனால் எந்த நபரும் என்னை எதிர்க்கவில்லை. ஆனால் நான் அவரை விட்டு விட வேண்டும் என்று மட்டுமே அவர்கள் என்னிடம் விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர். இவரை கொலை செய்வது எனது உரிமை அல்லவா? என்று அனைத்து முஸ்லிம்களை நோக்கி நான் கேட்டேன். ஆம்! இவரை கொன்று விடுங்கள். இது உமது உரிமையாகும் என்று அனைவரும் பதிலளித்தனர். மேலும் உபைதுல்லாஹ்வை ஏசிப் பேசினர். அவர் ஏன் இவ்வாறு செய்தார்? என்றும் கூறினர். இவரை என்னிடமிருந்து விடுவிப்பது உங்களின் கடமையில்லையா? என்று நான் அவர்களிடம் கேட்டேன். இல்லை; ஒருபோதும் இல்லை என்று அவர்கள் கூறினர். பின்னர் உபைதுல்லாஹ்வை மக்கள் ஏசிப்பேசினர். அவர் ஆதாரமின்றி இவரின் தந்தையை கொன்று விட்டார் என்றும் கூறினர். அப்போது நான் இறைவனுக்காகவும், அந்த மக்களுக்காகவும் அவரை விட்டு விட்டேன்.

இவ்வளவு பரிந்துரைகள் செய்யப்பட்டன. விசாரிக்கப்பட்டன. கேள்வி பதில் செய்யப்பட்டது. நான் அல்லாஹ் மற்றும் அவனது மக்களுக்காக இவரை விட்டு விடுகின்றேன் என்று அவர் கூறினார். முஸ்லிம்கள் மகிழ்ச்சியின் காரணமாக அதாவது அவர்கள் தமது தோள்களில் என்னை சுமந்து கொண்டனர். இறைவன் மீது ஆணையாக! நான் வீடு வரை மக்களின் தலைகள் மற்றும் தோள்களில் அமர்ந்த வண்ணம் வந்தடைந்தேன். பூமியில் கால் வைப்பதற்கு அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை. முஸ்லிம் அல்லாதவர்களை கொலை செய்த முஸ்லிமிற்கு மரண தண்டனை

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

வழங்குவதே சஹாபிகளின் செயல் வழிமுறையாக இருந்து வந்தது என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது. அதேபோன்று கொலையாளியை கைது செய்வதும், அவருக்கு தண்டனை அளிப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்து வந்ததும் இதிலிருந்து நிரூபணமாகின்றது. அவர் முஸ்லிமாக ஆகி இருந்தார். ஆனால் ஒருவேளை அவர் முஸ்லிம் அல்லாதவராக இருந்தபோதிலும் ஏற்கனவே கூறப்பட்ட விஷயங்களிலிருந்து நமக்கு இதுவே தெரிய வருகின்றது. அதாவது முஸ்லிமை கொலை செய்தவருடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படுமோ அதுபோன்றே முஸ்லிம் அல்லாதவருடனும் நடந்து கொள்ளப்படும் என்று தெரிய வருகின்றது. குறிப்பாக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கும்போது அவ்வாறே நடைபெறும். அரசாங்கம் தான் கொலையாளியை கைது செய்யக்கூடியதாக இருந்தது. மேலும் கைது செய்து தண்டனை அளிக்கக்கூடியதாக இருந்தது என்பதும் இதிலிருந்து தெரிய வருகின்றது. யார் வேண்டுமானாலும் தண்டனை வழங்க முடியாது. அரசாங்கமே தண்டனை வழங்கும்.

ஏனென்றால் அறிவிப்பிலிருந்து இவ்வாறு வெளிப்படுகின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களே உபைதுல்லாஹ் பின் உமரை கைது செய்திருந்தார்கள். மேலும் அவரை கொலை செய்வதற்கும் புர்முஸானின் மகனிடம் அன்னாரே அவரை ஒப்படைத்திருந்தார்கள். புர்முஸானின் எந்த வாரிசும் அவர் மீது வழக்கு தொடுக்கவில்லை. மேலும் அவரை கைது செய்திருக்கவுமில்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இடத்தில் இந்த சந்தேகத்தை அகற்றுவதும் அவசியமாக தெரிகின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் செய்ததைப் போன்று கொலையாளிக்கு தண்டனை வழங்குவதற்கு (கொலையாளியை) கொலையுண்டவரின் வாரிசிடம் ஒப்படைத்து விட வேண்டுமா? அல்லது அரசாங்கம் தண்டனை வழங்க வேண்டுமா?

இது தொடர்பாக நினைவிற் கொள்ள வேண்டும். இது ஒரு தனிப்பட்ட விவகாரமாகும். எனவே ஒவ்வொரு காலத்தின் தேவைக்கேற்ப அமல் செய்யும்படி இஸ்லாம் அதனை விட்டு விட்டது. தமது நாகரீகம், சூழலுக்கேற்ப எந்த வழிமுறை பயனளிக்கக்கூடியதாக இருக்குமோ அதனை சமுதாயம் மேற்கொள்ளட்டும். இந்த இரண்டு வழிமுறைகளும் சில குறிப்பிட்ட சூழல்களில் மட்டுமே பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றன என்பதில் எந்த ஐயமும் இல்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 259 – 361)

இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் நடைபெறும். தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன். பின்னர் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகைகளையும் தொழ வைப்பேன்.

அவர்களில் முதலாவதாக முஹம்மது ஸயீத் சாஹிப் அவர்களின் மனைவியும், ஹஸ்ரத் அல்ஹாஜ் ஹாஃபிழ் டாக்டர் ஸய்யது ஷபீ சாஹிப் தெஹ்லவி அவர்களின் மகளுமாகிய மதிப்பிற்குரிய பேராசிரியை ஸய்யிதா ஹன்ஸீம் ஸயீது சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் தமது 88 வது வயதில் பாகிஸ்தானில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தை ஹஸ்ரத் அல்ஹாஜ் ஹாஃபிழ் டாக்டர் செய்யது ஷபீ அஹ்மது தெஹ்லவி (ரலி) ஆவார்கள். பல புத்தங்களை எழுதியவராக இருந்தார்கள். மிகச் சிறந்த முறையில் முனாஸிரா செய்யக்கூடியவராகவும், ஆராய்ச்சியாளராகவும், மிக உயர்ந்த பத்திரிகையாளராகவும் இருந்தார்கள். தில்லியிலிருந்து அன்னார் 16 பத்திரிகைகளை வெளியிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் செய்யது ஷபீ அஹ்மது சாஹிப் அவர்கள் 12 வயதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். அன்னார் ஆசிய துணைக் கண்டத்தின் மிக பிரபல்யமான சூஃபியாகவும், கவிஞராகவும் திகழ்ந்த காஜா மீர் தர்த் சாஹிபின் சந்ததியைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் இந்த அடிப்படையில் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் அன்பர்களைச் சார்ந்வதர்களாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் செய்யது ஷபீ அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் உறவில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மருமகனாக இருந்தார்கள். 1957 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய முஹம்மது ஸயீத் அஹ்மது சாஹிப் துணை பொறியாளர் (லாஹூர்) அவர்களுடன் மர்ஹூமாவின் திருமணம் நடந்தது.

அன்னாரின் மகள் காலிதா சாஹிபா இவ்வாறு எழுதுகின்றார்கள்: எனது தாய்வழிப் பாட்டி எனது பெற்றோரின் திருமணத்தை நிச்சயிக்கின்றபோது இறையச்சத்தை நிபந்தனையாக கருத்தில் கொண்டார்கள். அவர்கள் இந்த விஷயத்தை மட்டுமே பார்த்தார்கள். 22, 23 வயதில் மணமகன் எப்படிப்பட்ட காயிதாக இருந்தார் என்றால் அவரைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இதில் எந்த சந்தேகமும் இல்லை. அது பாதி மரணித்த ஜமாஅத்தாக இருந்தது. அதில் வாழ்க்கையின் உயிரோட்டம் ஊதப்பட்டது. இந்த தொண்டின் அடிப்படையில் அதன் காயித் முஹம்மது ஸயீத் அஹ்மது மற்றும் அவரது நான்கு உதவியாளர்கள் பொறுப்பாளர்கள் ஆவர்.

பின்னர் ஹஸ்ரத் மஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரின் தொண்டுகள் மற்றும் படைப்பின சேவை குறித்து இவ்வாறு கூறினார்கள்: கடந்த வெள்ளத்தின் சந்தர்ப்பத்தில் அன்னார் அசாதாரண முறையில் பணி செய்தார்கள். எனவே அவர் இந்த அடிப்படையில் சிறப்பான பாராட்டுதலுக்கு தகுதி பெற்றவர் ஆவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நஸீம் செய்யது அவர்களின் குடும்பத்தை மிகவும் பாராட்டியுள்ளார்கள். இதே விஷயத்தை கருத்தில் கொண்டவாறு நஸீம் செய்யிது சாஹிபா அவர்களின் தாயார் அன்னாரின் திருமணத்தை அவருடன் நடத்தினார்கள். நஸீம் செய்யது சாஹிபாவிற்கு 4 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். 1954 ஆம் ஆண்டில் அன்னாரின் மார்க்கத் தொண்டு ஆரம்பமானது. மர்ஹூமா ஹஸ்ரத் ஸய்யிதா அவர்களுடன் தொண்டை ஆரம்பம் செய்தார்கள். 2015 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 61 ஆண்டுகள் இது தொடர்ந்து வந்தது. ஸயீத் சாஹிப் இராணுவத்தில் இருந்தார்கள். எனவே அன்னாரின் பணிமாற்றம் நடந்து வந்தது. எனவே பல்வேறு நகரங்களில் அன்னாருடன் மர்ஹூமா சென்று வந்தார்கள். அங்கு பல்வேறு நகரங்களில் மர்ஹூமாவிற்கு தொண்டுகளுக்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் சுயமே எழுதப்படிக்கத் தெரிந்த, கல்வி அறிவு பெற்ற பெண்மணியாகவும் இருந்தார்கள். அன்னார் எழுதிய சுமார் 20 புத்தகங்கள் உள்ளன. அதில் நபிமார்களைப் பற்றிய கதைகளும் உள்ளன. சான்றோர்களைக் குறித்தும் ஏராளமான புத்தகங்களை அன்னார் எழுதியுள்ளார்கள்.

அன்னாரின் ஒரு மகள் ஹாமிதா கஃபூர் மன்னான் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: எனது தாயார் இறைவணக்கம் செய்பவராகவும், செயல் கொண்ட அறிஞராகவும், கலப்பற்றத்தன்மையும், நன்றியுணர்வும், தியாக மனப்பான்மையும், அன்பும், பரிவும், பணிவும் படைத்த பெண்மணியாக இருந்தார்கள். எப்போதும் அன்னார் உருக்கத்துடன் துஆ செய்வதை நான் கண்டுள்ளேன். தஹஜ்ஜுத் தொழுகைகளையும், நஃபில்கள் மற்றும் இதர தொழுகைகளையும் எப்போதும் பேணி வந்ததை நான் பார்த்துள்ளேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் முதல் தற்போது வரை அன்னார் நான்கு கலீஃபாக்களுடனும் தனிப்பட்ட தொடர்பு வைத்திருந்தார்கள். அன்னாருக்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்து வந்தது.

இங்கு என்னுடன் அன்னாரின் சந்திப்பு நிகழவில்லை. எனினும் கடிதங்களின் மூலமாக இதனை அன்னார் எப்போதும் வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். அன்னாரின் பிள்ளைகளும் இதனையே எழுதியுள்ளனர். அன்னாரின் கடிதங்கள் வந்தபோதெல்லாம் அன்னாரின் கடிதங்களில் அசாதாரண வெளிப்பாடு இருந்து வந்தது. பேச்சு என்ற அளவில் மட்டுமல்லாமல் கிலாஃபத்துடன் கலப்பற்ற மற்றும் நன்றியுணர்வுமிக்க தொடர்பு செயலளவிலும் இருந்தது என்பது உண்மையில் தென்பட்டு வந்தது. அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளுக்கும் இந்தத் தொடர்பை நிலைநாட்டும் நற்பேறை வழங்குவானாக.

அன்னாரின் மூத்த மகன் காலித் ஸயீத் சாஹிப் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வுடனான தொடர்பில் எப்போதும் நிலை நில்லுங்கள். அல்லாஹ்வுடனான தொடர்பு எப்படி இருக்க வேண்டுமென்றால் அல்லாஹ் உங்களுக்கு முன்னால் நண்பனைப் போன்று இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உண்மையான அன்பு கொள்ளுங்கள். நீங்களும் அன்பு செலுத்துங்கள். குழந்தைகளுக்கும் அதனை கூறி வாருங்கள். இதனையே எங்களுக்கு எப்போதும் கூறி வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஜமாஅத்துடன் ஆழமான மற்றும் ஆன்மீக தொடர்பை தானும் வைத்திருந்தார்கள். பிள்ளைகளுக்கும் அறிவுறுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பையும்,

முழுமையான கட்டுப்படுதலையும் தானும் மேற்கொண்டிருந்தார்கள். எங்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு எந்நேரமும் தயாராக இருந்து வந்தார்கள். சிறு வயது முதலே தொழுகைகள் மற்றும் இஸ்லாமிய விஷயங்களின்படி முறையாக செயல்படுவதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். மேலும் எங்களுக்கு அதற்கான பழக்கத்தை ஏற்படுத்தி வந்தார்கள். வழியில் செல்லும்போது படைப்பின சேவை ஆற்றுவார்கள். மேலும் மக்களுக்கு எளிமையை உருவாக்குங்கள் என்று கூறி வருவார்கள்.

பொருள் தியாகத்தின் பக்கம் குறிப்பாக கவனம் இருந்தது. பொருள் தியாகம் செய்ததற்குப் பிறகு வீட்டின் செலவுகளை கருத்தில் கொள்வார்கள். தினமும் திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். எங்களுக்கும் அதற்கு அறிவுரை செய்து வந்தார்கள். உறவுகளை பேணி வந்தார்கள். ஒவ்வொரு ஏழை மற்றும் செல்வந்தரான உறவினர்களுடன் உறுதியான தொடர்பு அன்னாரின் தனித்தன்மையாக இருந்தது. எங்களுக்கும் அதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். இறைவன் பால் மக்களை அழைப்பதற்கு எப்போதும் தயாராக இருந்து வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழும்படி எங்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வந்தார்கள். அறிவை அதிகரித்துக் கொள்வதற்காக எங்களுக்கு பாடம் நடத்தி வந்தார்கள். எப்போதும் புன்சிரித்து வரும்படியும், எவருக்கும் தீயதை விரும்ப வேண்டாம் என்றும் எங்களிடம் கூறி வருவார்கள். விருந்து உபசரிப்பு செய்வதும், விருந்தினர்களை கண்ணியப்படுத்துவதும் அன்னாரிடத்தில் அதிகமாக காணப்பட்டது. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் நன்மைகளை அன்னாரின் பிள்ளைகளும் பின் தொடர்வதற்குரிய நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஜெர்மனியைச் சேர்ந்த தாவூத் சுலைமான் பட் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 46 வது வயதில் புற்றுநோயின் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அன்னாரின் கொள்ளுத்தாத்தா ஹஸ்ரத் அப்துல் ஹகீம் பட் சாஹிப் அவர்கள் மூலமாக அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாக இருந்தார்கள். மர்ஹூம் தனக்குப் பிறகு ஒரு மனைவியையும், ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் மனைவியாகிய சமீதா தாவூத் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு எப்போதும் தயாராக இருந்தார்கள். ஜமாஅத்திற்கு அதிக அதிகமாக எப்படி தொண்டாற்றுவது என்பதே அன்னாரின் முயற்சியாக இருந்து வந்தது. உண்மையான பொருளில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் மனிதராக இருந்தார்கள். அறிந்தவர்கள் அனைவரும் இவ்வாறே கூறுகின்றனர். அதாவது அன்னாரின் முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு இருக்கும். தான தருமங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுத்து வந்தார்கள். எப்போதும் தொண்டிற்கு தயாராக இருக்கக்கூடியவராக இருந்தார்கள்.

இங்கு ஜெர்மனியில் சிறப்பு பாதுகாப்பு பிரிவில் டியூட்டி செய்து வந்தார்கள். அன்னாரின் குழு உறுப்பினர்களும் இவ்வாறு எழுதியுள்ளனர்: மிகவும் சிரித்த முகத்துடனும், முழுப் பொறுப்புடனும் டியூட்டி கொடுத்து வந்தார்கள். அவர்களிடமிருந்த ஒரு சிறப்பு என்னவென்றால், ஒரு பணியை துவங்குவதற்கு முன்பு திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள்.

நானும் இதனைக் கண்டுள்ளேன். அதாவது மிக அழகிய முறையில் எப்போதும் அன்னார் தனது பணியை செய்து முடித்துள்ளார்கள். அல்லாஹ் அன்னாரின் உறவினர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. அன்னாரின் நன்மைகளை அன்னாரின் பிள்ளைகள் தொடரச் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு சியால்கோட்டைச் சேர்ந்த குலாம் முஸ்தஃபா அஃவான் அவர்களின் மனைவியான ஸாஹிதா பர்வீன் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் 61 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

ரஷ்யாவில் நமது முபல்லிகாக இருக்கின்ற ஜமீல் தபஸ்ஸும் அவர்களின் மனைவி மர்ஹூமாவின் மகள் ஆவார்கள். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் எனது தாயார் பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் தந்தைவழி பாட்டனார் மற்றும் தாயாரின் பாட்டனாருமாகிய தீவான் பக்ஷ் சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அன்னார் தஹஜ்ஜுத் தொழாமல் இருந்ததை ஒருபோதும் நான் கண்டதில்லை. ஜமாஅத் மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் எப்போதும் உளப்பூர்வமான பற்று கொள்ள வேண்டுமென்று அன்னார் பிள்ளைகளுக்கு எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள். தமக்குப் பின்னர் ஒரு மகனையும், நான்கு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் மூன்று மருமகன்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் ஆவர். முபல்லிக்மார்களுடன் திருமணம் முடித்துள்ள இரண்டு மகள்கள் தமது கணவர்களுடன் நாட்டை விட்டு வெளியில் வசித்து வந்தனர். எனவே கடைசி நேரத்தில் தமது தாயாரிடத்தில் செல்ல முடியவில்லை மற்றும் அன்னாரை பார்க்க முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கெள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கு அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஃபைஸலாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த சவுத்ரி அப்துல் ஹய் சாஹிப் அவர்களின் மகனாகிய ரானா அப்துல் வஹீத் சாஹிப் (லண்டன்) அவர்களுடையதாகும். ஜூன் 26 ஆம் தேதி அன்னாருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்ஸாருல்லாஹ் அமைப்பில் அன்னார் மிகவும் கடுமையாக உழைத்துள்ளார்கள். அதுமட்டுமின்றி மஸ்ஜித் ஃபஸல் பகுதியின் பொருளாளராகவும், விருந்தினர் செயலராகவும் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் உழைக்கும் ஊழியராக இருந்தார்கள். மிக மகிழ்ச்சியுடன் அனைத்து தொண்டுகளையும் ஆற்றி வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு பங்களாதேஷின் முன்னாள் அமீர் ஜமாஅத் அல்ஹாஜ் மீர் முஹம்மது அலி சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 84 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அன்னார் உள்ளூர் மற்றும் தேசிய அளவில் ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளார்கள். 1997 முதல் 2003 வரை பங்களாதேஷின் தேசிய அமீராக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். பின்னர் ரிஷ்தா நாதா (திருமணபந்த) செயலராகவும், தப்லீக் செயலராகவும் பொறுப்புகளை நிறைவேற்றி வந்தார்கள். 2013 முதல் இறுதி மூச்சு வரை டாகா ஜமாஅத்தின் அமீராக தொண்டாற்றி வந்துள்ளார்கள். அன்னாருடைய அமாரத் காலகட்டத்தில் பங்களாதேஷ் ஜமாஅத் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. குறிப்பாக ஜமாஅத்தின் சொத்துகள் மற்றும் கட்டிடங்களில் பெரும் பணிகள் நடந்துள்ளன. அன்னார் தலைமையக மிஷன் ஹவுஸ் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். பின்னர் பள்ளிவாசல் போன்றவற்றையும் நிறைய கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

மிகவும் நல்லவராகவும், கலப்பற்ற தன்மை கொண்டவராகவும், நேர்மையானவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், அனுதாபமிக்கவராகவும், துஆ செய்யக்கூடியவராகவும், பொருள் தியாகங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெறக்கூடியவராகவும், ஏழைகளை மிகவும் பராமரிப்பவராகவும், மக்களுக்கு பயன்படும்


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

நபராகவும் மர்ஹூம் இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராகவும், ஜமாஅத்தின் செயல் துடிப்புள்ள ஊழியராகவும் இருந்தார்கள்.

அன்னார் தமக்குப் பிறகு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. நான் கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவருடைய ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர் சாஹிப்)

*(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى لِّلْمُتَّقِيْنَ (2:3) (இதுவே முழுமையான வேத நூல். இதில் எவ்வித ஐயமும் இல்லை. இறையச்சம் உடையோருக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது) என்று அல்லாஹ் கூறுகின்றான். இது எப்படிப்பட்ட விருந்து என்றால் இந்த விருந்திற்கான ஏற்பாடு ஏற்கனவே தயாராக உள்ளது. சுருக்கமாக, மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல்களிலிருந்து அவன் பயன்பெற்றால் நிச்சயம் இறைநேசராக முடியும். நான் உறுதியுடன் கூறுகின்றேன். இந்த உம்மத்தில் பெரும் ஆற்றல் கொண்ட மக்கள் வருகின்றனர். அவர்கள் ஒளியாலும், உண்மையாலும், நன்றியுணர்வாலும் நிறைந்தவர்களாக இருக்கின்றார்கள். எந்த நபரும் தம்மைத்தாமே அதிலிருந்து இழப்பிற்குரிவராக கருத வேண்டாம். நமக்கு பங்கு கிடைக்காது என்று புரிந்து கொள்ளும்படி இறைவன் பட்டியல் எதனையும் வெளியிட்டுள்ளானா என்ன? இறைவன் மிகவும் கருணையாளன் ஆவான். அவனது கருணை என்பது மிகவும் ஆழமான கடலாகும். அது ஒருபோதும் முற்றுப் பெறுவதில்லை. தேடக்கூடிய எவரும் இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார். எனவே இரவில் எழுந்து எழுந்து நீங்கள் துஆ செய்ய வேண்டும். மேலும் அவனது அருளை வேண்ட வேண்டும். ஒவ்வொரு தொழுகையிலும் துஆவிற்கென்று பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ருகூ, கியாம், கஃதா, சஜ்தா போன்ற பல நிலைகள் (தொழுகையில்) உள்ளன. ஒரு நாளில் ஐந்து முறை தொழுகைகள் தொழப்படுகின்றன. ஃபஜ்ர், லுஹர், அஸர், மக்ரிப் மற்றும் இஷா போன்றவை. மேலும் இதை கடந்து இஷ்ராக் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகைகள் உள்ளன. இவை அனைத்தும் துஆ செய்வதற்குரிய சந்தர்ப்பங்களே ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 319 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அளவிற்கு அழுத்தம் தரப்பட்டுள்ளது. எந்த அளவிற்கு உறுதியான வாக்குறுதியாக உள்ளது. இந்த வசனம் தொடர்பாக இந்த கருத்தையும் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். நிராகரிப்பாளர்கள் சுட்டி உரைப்பதற்காக இந்த பொருளும் தருகின்றனர். அதாவது இத்துனை மகத்துவமிக்க வேதத்துடன் வானவரும் வந்திருக்க வேண்டுமே? என்று கூறுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: அறிவிலிகளே! நீங்கள் வானவர்களை குறிப்பிடுகின்றீர்கள். இந்த வேதத்திற்கு எப்படிப்பட்ட மகிமை உள்ளதென்றால் அதனைப் பாதுகாப்பதற்காக நாம் சுயமே வருவோம். மேலும் எவர் இந்த வேதத்தின் மீது தவறான எண்ணத்துடன் கையை உயர்த்துகின்றார் என்று நாம் பார்ப்போம். வானவர்கள் திருக்குர்ஆனிற்கு பாதுகாப்பு அளிப்பதில்லை என்பது இதன் பொருளல்ல. ஏனென்றால் எஜமானனான இறைவன் பாதுகாக்கின்றான் என்றால் வானவர்கள் தத்தமது படித்தரத்தில் பாதுகாப்பு வழங்குவார்கள். ஆனால் اِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ (நாமே இதனை பாதுகாப்போம்) என்று கூறி ஒரு கூடுதல் விஷயம் இதில் கூறப்பட்டுள்ளது. அதாவது அதில் சில சிறப்புகளும் உள்ளன. அதனை வானவர்களால் கூட பாதுகாக்க முடியாது. மாறாக, அல்லாஹ் சுயமே அதனை பாதுகாப்பதற்கான பொறுப்பை எடுத்துள்ளான். எல்லா விஷயத்தையும் வானவர்கள் பாதுகாக்கின்றனர். ஆனால் இறைவன் நேரடியாக பாதுகாப்பதில் ஒரு நுட்பம் உள்ளது. மேலும் திருக்குர்ஆனை பொதுவான விஷயங்களிலிருந்து தனித்துவம் வாய்ந்ததாக ஆக்குகின்ற வித்தியாசமாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 14 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*(ஹுஸூர் அவர்களின் சுற்றுப்பயணம்... கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

புத்தககங்களின் மொழியாக்கம் தொடர்பாக வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இங்கு உங்களுடைய ஒரு குழுவை உருவாக்குங்கள். அவர்கள் மொழியாக்கப் பணியை செய்யட்டும். அவர்களுக்கு ஆங்கில மொழியில் நல்ல புலமை இருக்க வேண்டும். மேலும் அத்துடன் உருது மொழியும் தெரிந்திருக்க வேண்டும். அல்லது உருது தெரிந்த ஒரு பெரியவரை அவருடன் இணைத்துக் கொள்ளுங்கள். அவரது உதவியுடன் மற்றவர் மொழியாக்கம் செய்யட்டும்.

பிரசுரங்கள் தயாரிப்பு தொர்பாக வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்றைய நாட்களில் உலகத்திற்கு மார்க்கத்தின் மீது ஆர்வம் இல்லை. இறைவன் மீது எவருக்கு நம்பிக்கை இருப்பதில்லையோ அவருக்கு மார்க்கத்தில் என்ன ஆர்வம் இருக்கும்? எனவே அதுபோன்ற மக்களுக்கு முதலில் இறைவன் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியமாகும். மார்க்கம் குழப்பத்தை பரப்புகின்றது என்பது மக்களின் எண்ணமாக உள்ளது. எனவே இந்த தலைப்பில் பிரசுரம் தயாரிக்க வேண்டும். அப்போது தான் மக்களின் எண்ணங்கள் சுத்தமாகும்.

**ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** பிரசுரங்கள் போன்றவைகளை தயாரிக்கும்போது முதலில் திட்டமிடுங்கள். மக்களின் ஆர்வம் எதில் உள்ளது? என்று ஆய்வு செய்யுங்கள். மேலும் ஏதாவதொரு பகுதியை தேர்ந்தெடுத்து அங்கு எத்தனை நாத்தீகர்கள் உள்ளனர்? இறை இருப்பை ஏற்றுக் கொள்ளாத நபர்கள் எத்தனை பேர் உள்ளனர்? மார்க்கத்தை விரும்புகின்ற நபர்கள் எத்தனை சதவிகிதம் உள்ளனர்? கிறிஸ்தவ மார்க்கத்தில் எத்தனை நபர்களுக்கு ஆர்வம் உள்ளது? எத்தனை நபர்கள் இஸ்லாத்திற்கெதிராக உள்ளனர்? எவ்வளவு நபர்கள் இஸ்லாத்தை தீவிரவாத மார்க்கமாக கருதுகின்றனர்? என்று ஓர் ஆய்வு நடத்துங்கள்.

முதலில் இந்த ஆய்வுப் பணிகளை செய்யுங்கள். முதலில் மக்களின் இயல்புகளை பாருங்கள். அதன் பிறகு அவர்களின் தேவை மற்றும் இயல்பிற்கேற்ப பிரசுரங்களை தயாரித்து வெளியிடுங்கள்.

ஹுஸூர் அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்: குத்தாம் மற்றும் லஜ்னாக்களின் தனித்தனி குழுக்களை உருவாக்குங்கள். அஹ்மயத்திற்கெதிராக செயல்படுகின்ற பல்வேறு Website கள் உள்ளன. அந்த வலைதளங்களில் இந்த குழுவினர் சரியான போதனைகளால் நிரப்பி விட வேண்டும். அவர்கள் எந்த அளவிற்கு நிரப்ப வேண்டும் என்றால் எங்கு ஒருவருக்கு அந்த வலைதளங்களில் அஹ்மதிய்யத்திற்கெதிரான கட்டுரைகள் தென்படுகின்றனவோ அங்கு அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் உண்மையான போதனைகளும் தென்பட்டு விட வேண்டும். மேலும் அதே இடத்தில் அவரது எதிர்மறையான பொய் பிரச்சாரத்திற்கு பதிலும் ஒருவருக்கு கிடைத்து விட வேண்டும்.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 13 டிசம்பர் 2013)


*126 வது காதியான் ஆண்டு மாநாடு*

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்களுடன் இப்போதிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நிய்யத் வைத்து தயாரிப்புகளை தொடங்கி விடுங்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 02 Sep 2021 Issue No. 35

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.575/- (Per Issue Rs. 11/-) (WEIGHT - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் – 2013)

**20 அக்டோபர் 2013 (ஞாயிற்றுக்கிழமை)**

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஆஸ்திரேலியாவின் தேசிய செயற்குழுவுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** மெல்போர்னிலிருந்து ஒரு குடும்பம் என்னை சந்திக்க வந்தது. ஆண்கள் ஜமாத்தின் நிகழ்ச்சிகளுக்கு வருவதில்லை. மனைவியும், குழந்தைகளும் வருகின்றனர் என்பது அவர்களின் முகத்திலிருந்து தெரிய வந்தது. ஏதாவதொரு பொறுப்பாளரால் துன்பம் ஏற்பட்டுள்ளதா? என்று நான் கேட்டேன். அப்போது அழத் தொடங்கி விட்டார். மேலும் உணர்ச்சிவசப்பட்டு விட்டார். நான் அவருக்கு புரிய வைத்தேன். எனினும் பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள் நல்லதாக இருக்க வேண்டும். உங்களது பொறுப்பாளர்களை பிடியுங்கள். அப்படிப்பட்ட சிலரின் நடவடிக்கைகளால் சிலர் (ஜமாஅத்திலிருந்து) விலகி விடுகின்றார்கள். தமது சொந்த கௌவரத்தையும், பகைமையையும் ஒழித்து விடுங்கள். இறைவன் தொண்டிற்கான சந்தர்ப்பம் வழங்குகின்றான். அதனை ஓர் இறை அருளாக கருதுங்கள். மஜ்லிஸே ஷூரா மற்றும் ஜமாஅத் தேர்தல்களுக்கு முன்பாக நான் குத்பா ஜுமுஆ கொடுத்திருந்தேன். அதனை அனைத்து பொறுப்பாளர்களும் கேட்க வேண்டும். யூ.கேவின் ஷூரா சந்தர்ப்பத்தின்போது நான் கொடுத்திருந்த குத்பாவையும் அனைவரும் கேட்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆக இருந்தார்கள். அப்போது மதிப்பிற்குரிய ஸஹூர் அஹ்மத் பாஜ்வா சாயிப் மர்ஹூம் நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அன்னாருக்கு புரிய வைத்தார்கள். நீங்கள் நாயிப் நாஸிராக இருக்கின்றீர்கள். **இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். ஒருவரை அஹ்மதிய்யத்தில் இணைப்பது மிகவும் கடினமான பணியாகும். ஆனால் விரட்டுவது எளிமையான பணியாகும்.** இவ்வாறு ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் தன்னிடம் கூறியதாக சவுத்ரி பாஜ்வா சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள். எனவே பொறுப்பாளர்கள் தமது நடைமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். எல்லாருடனும் அன்பு மற்றும் நேசத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஜமாஅத்துகளின் தர்பிய்யத் செயலர்கள் அனைவருக்கும் பயிற்சி கிடைக்கும் பொருட்டு புத்தாக்க வகுப்பு நடத்த வேண்டும். எவ்வாறு பணி செய்ய வேண்டும்? அனைவரையும் இணைத்துக் கொண்டு செல்வது எப்படி? எவ்வாறு நுட்பத்துடன் தர்பிய்யத் செய்து தம்முடன் இணைக்க வேண்டும்? பின்தங்கி இருப்பவர்களை எவ்வாறு அருகில் கொண்டு வருவது? என்று அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** என்னுடனான சந்திப்பின் போது ஐந்து விவகாரங்கள் என் முன் வந்துள்ளன. ஒருவருடைய எந்த விவகாரமாக இருந்தபோதிலும் அவரை இழிவுபடுத்துவதற்கு வேறு எவருக்கும் உரிமை இல்லை. உண்மையாக இருந்தாலும் கூட அப்போதும் அவரை அவமானப்படுத்தக் கூடாது. திரையிட வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** Humanity FIrst அமைப்பு மிக அதிகமாக தாக்கத்திற்குள்ளாகி வருகிறது. குத்தாம், அன்ஸார் அமைப்புகள் தத்தமது Charity Walk நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். அவர்கள் தமது பெயரை பயன்படுத்த வேண்டும். அவர்கள் தமது அடையாளத்தை முன் நிறுத்த வேண்டும். எஞ்சிய பங்கிடப்படும் தொகையிலிருந்து Humanity First அமைப்பிற்கும் நிச்சயம் கொடுக்கட்டும். மற்ற ஏனைய உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கும் கொடுங்கள். CHECK கொடுப்பதற்கான நிகழ்ச்சிகளை நடத்தும்போது Print & Electronic Media வையும் அழைக்க வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் ஒன்று, ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்படும். இரண்டாவதாக, இஸ்லாம் எவ்வளவு அழகிய மார்க்கமாகும். அது நிறம், இனம், மார்க்கம் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் சகோதரத்துவத்திற்கான போதனையை எவ்வாறு வழங்குகின்றது. மேலும் எவ்வாறு அனைவருக்கும் உதவி செய்கின்றது என்பது அந்நியர்களுக்கும் தெரிய வரும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவங்கள். Charity Walk மட்டுமின்றி, இரத்தான முகாம், மரம் நடுதல் போன்ற நிகழ்ச்சிகள் உள்ளன. ஆண்டின் துவக்கத்தில் கவுன்ஸில் போன்ற அமைப்புகளை சந்தித்து தமது வட்டாரத்தின் தூய்மை மற்றும் வகாரே அமல் நிகழ்ச்சிகளை நடத்துங்கள். அதுபோன்ற நிகழ்ச்சிகளில் ஊடகங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் ஊடகங்களில் வருவதால் ஜமாஅத்தின் அறிமுகம் அதிகம் ஏற்படும். எந்தப் பணிகளின் மூலமாக நன்மை பரவுமோ மேலும் இஸ்லாத்தின் அழகு வெளிப்பட்டுக் கொண்டிருக்குமோ அதனை பரப்புவது அவசியமாகும்.

ஹுஸூர் அவர்கள் வெளியீட்டுத்துறைக்கு வழிகாட்டல் வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்: புத்தகங்களுக்கு குறைவான விலையை வையுங்கள். குறைந்த லாபத்தை பெற்றுக் கொள்ளுங்கள். இவ்வாறு உங்களது புத்தகம் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகி விடும்.

**ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் துவக்கத்தில் ரப்வாவைச் சேர்ந்த கடைக்காரர்களுக்கு இவ்வாறு வழிகாட்டியிருந்தார்கள். குறைந்த லாபம் வையுங்கள். இதன் மூலம் ஒன்று, உங்களின் பொருட்கள் அதிகமாக விற்பனையாகும். மேலும் அதன் மூலம் நல்ல வருமானமும் கிடைக்கும். இரண்டாவதாக, வெளியிலிருந்து பொருட்கள் ரப்வாவிற்கு வந்து கொண்டிருக்கும். ஆனால் தற்போது அதிக லாபம் வைக்க துவங்கி விட்டனர்.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: வெளியீட்டுத் துறையின் பணி பணம் சம்பாதிப்பதல்ல. மாறாக, அவர்களின் முன்னேற்றமும், வெற்றியும் எதில் உள்ளது என்றால், இத்தனை புத்தகங்களை நாங்கள் விற்று விட்டோம். இத்தனை பெரும் எண்ணிக்கையில் மக்கள் புத்தகங்களை வாங்கியுள்ளனர் என்பதிலேயே உள்ளது.

**ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** திருக்குர்ஆனை அதிக அளவில் விற்பனை செய்ய வேண்டும். லண்டனிலிருந்து திருக்குர்ஆன் இங்கு வந்தடைந்த பிறகும் அதிக விலை ஏற்படுகின்றதென்றால் பின்னர் முழு விவரத்தையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். அப்போது அது தொடர்பாக நான் உரிய வழிகாட்டல் வழங்குவேன்.

**ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் Revelation புத்தகத்தை உங்களது Stock லிருந்து எடுத்து விடுங்கள். அதனை பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள். அதனுடைய தாள்கள் மஞ்சள் நிறமாகி வருகின்றது என்று நான் ஏற்கனவே வழிகாட்டியுள்ளேன்.

**ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** காதியானிலிருந்து என்னென்ன புத்தகங்கள் வெளியாகி வருகின்றனவோ அதனை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளுங்கள். அன்வாருல் உலூம் புத்தகத்தின் மேலும் பல தொகுதிகள் தற்போது வெளியாகி விட்டன. அதனை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

*(தொடர்ச்சி 11வது பக்கம்…)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad